தாமரை வெளியீடு 2.

தமிழ் வாழ்க.

# மழலைத்தேன்

மழலை அமிழ்தம் — குதலைக் கனி
கிள்ளை மொழி — மக்கட் செல்வம்

நான்கு பகுதிகள்.

∴

ஆசிரியர்
புலவர், ச. பாலசுந்தரம்,
தமிழ்ப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி.

∴

வெளியீடு :
தாமரை வெளியீட்டகம்,
154/89, வடக்குப் பெருந்தெரு, தஞ்சாவூர்.

முதற் பதிப்பு—டிசம்பர் 1965

விலை ரூ. 3-00

பதிப்புரிமை ஆசிரியருடையது.

மழலைத் தேன் பாடல்களைப் பாட
நூல்களிற் சேர்க்கவும்,
திரைப்படம்—நாடகங்களில்
பயன்படுத்தவும் விரும்புவோர்
நூலாசிரியர் உடன்பாடு
பெறுதல் வேண்டும்.

அச்சிட்டோர் :
மகாலிங்கம் பதிப்பகம்,
1321, தெற்கலங்கம், தஞ்சாவூர்.

தமிழன்னையின் தவமகனார், மொழி நூலறிஞர், பன்மொழிப் புலவர்,
மதுரைப் பல்கலைக் கழக முதற்றுணைவேந்தர், தமிழ்ப் பேராசிரியர்



திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கு

*இந்நூலைக் குழந்தைகளின் சார்பாகப் படைத்து மகிழ்கின்றேன்.*

# அணிந்துரை

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பன்மொழிப் புலவர்,

**திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,**

பி ஏ., பி.எல்., எம் ஓ. எல்., அவர்கள்.

அன்பர் வித்துவான். **ச. பாலசுந்தரம்** அவர்கள் "**மழலைத் தேன்**" என்ற நூலை இயற்றியுள்ளார் குழந்தைப் பாக்கள் நிறைந்த நூல் அது. குழந்தைகள் மகிழ்ந்து இன்புறுவதோடு வயது ஏற ஏற எண்ணி எண்ணி இன்புற்று முன்னேறச் செய்யும் பாக்கள்.

ஓவியத் திறமை நிறைந்த இவர்கள் படைத்த படங்களோடும் (இப்பாக்கள்) வெளிவருகின்றன. வித்துவான்கள் குழந்தைப் பாக்களில் ஈடுபடுவது அருமை என்று பலர் கருதுவதைப் பொய் எனக் காட்டுகிறார் ஆசிரியர்.

குழந்தை இலக்கியம் ஓங்கினாலன்றி இக்காலத்தில் தமிழ் இலக்கியம் சிறப்பது இயலாது. குழந்தைகள் தாமே வருங்காலப் பெருமக்கள்? எனவே இந்த நூலைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்துவைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மேலும் இந்த ஆசிரியர் குழந்தை விருந்துகள் பல அமைத்து இன்புறுவாராக.

(ஒப்பம்) **தெ. பொ. மீ.**

கக்கீரர் கழகம்
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி




தாய்ப்பால் உண்ணும் குழந்தை தவழுங்கால் மண்ணைச் சுவைக்கிறது. தாய் தக்க பொருளைத்தந்து அதனை மாற்றுகின்றாள். தாலாட்டின் பொருளறியாது இசை நயத்தைச் சுவைத்து வளரும் குழந்தை, மழலை மொழிந்து குதலை பேசுகிறது. கற்றுத்தராமலேயே திரைப்படப் பாடல்களைப் பாடுகிறது. இளமையிலேயே சிறுவர் தம் சிந்தனையை நெறிப்படுத்தும் ஆசிரியர் சிறு கதைகளையும், பாடல்களையும் சொல்லித்தருவர். அதனால், அவை, குழந்தைகள் அறிந்துள்ளனவற்றைக் கொண்டு அறியவேண்டிய கருத்துக்களும், புதிய சொற்களும் இடமறிந்து அளவோடு இனிமையாக அமைந்து படிப்படியாகச் சிந்தனையையும் இலக்கிய உணர்வையும், அறநெறிகளையும் எளிதாக அளிக்கவல்லனவாதல் வேண்டும்.

அம்முறையில் எளிமை, இனிமை, சுவை முதலிய பண்புகளோடு தமிழ் மரபும் விளங்கக் குழந்தைப் பாக்கள் எழுத விரும்பிச் சில எழுதியும் மகிழ்ந்தேன். அவற்றுள் எஞ்சியவற்றை வெளியிடக் கருதிப் பார்க்கும்போது அவை எல்லாம் ஒத்த நிலையில் இல்லாமல் இளஞ்சிறார் (தொடக்கப் பள்ளி) சிறார் (இடைநிலைப் பள்ளி) இளைஞர் (உயர்நிலைப் பள்ளி) ஆய முத்திறத்தார்க்கும் பயன்படும் நிலையில் இருந்தன. எனவே அம்முறையில் அவற்றைப்பகுத்துச் சிலவற்றை எழுதிச்சேர்த்து முறையே மழலையமிழ்தம், குதலைக்கனி, கிள்ளைமொழி என மூன்று பகுதியாகத் தலைப்புத் தந்து குழந்தையைப் பற்றிய சிலவற்றை மக்கட்செல்வம் என்னும் தலைப்பில் நான்காம் பகுதியாக அமைத்து நூல் முழுதற்கும் "மழலைத்தேன்" எனப் பெயரிட்டு 1964-இல் நூல்வடிவில் எழுதிவைத்தேன், ஏற்ற முறையில் படம் எழுதுவோர் வாய்க்கப்பெறாமல் யான் வாளா

இருப்பதனையறிந்த என் ஆருயிர் நண்பர் திரு அ. இராமமூர்த்தி அவர்கள் குழந்தைகளுக்குரிய சொத்துக்களை நீங்கள் பெட்டியில் பூட்டிவைத்திருப்பதுகுற்றம் அவற்றை அவர்களிடம் வழங்குதல் என்கடமை என விளையாட்டாகக் கூறிவிட்டுச் சென்னையி லிருக்கும் ஓவியர், தஞ்சைத்திரையன் அவர்களை யழைத்துப் படம் வரையச்செய்து, என்பால் பேரன்பு பூண்டொழுகும் மகாலிங்கம் அச்சகச் செயற்பொறுப்பாளர் திரு. நா. சின்னையா அவர் களிடத்தே தர அவர்களும் அச்சுப்பிழை திருத்துவதுதவிர பிற பொறுப்புக்களைத் தாமே ஏற்று அழகாக அச்சாக்கிவிட்டார்கள்.

பேரறிவும் பெருந்தகவும் குழந்தை உள்ளமும்கொண்டு திகழும் பன்மொழிப் புலவர். பேராசிரியர், திரு. தெ. பொ. மீ. அவர்களிடம் வாழ்த்துரை வேண்டினேன். பல்கலைச் செல்வர் தம் வள்ளன்மைதோன்ற வாழ்த்துரையை அணிந்துரையாகவே வழங்கியருளியமை எனதுபேருகும். அவர்கள் பேருளை நன்றி ததும்ப வணங்குகிறேன்.

கையெழுத்துப் படியைப் பார்த்து மகிழ்ந்து ஆக்கமான கருத்துக்களை வழங்கியருளிய பெருந்தகையார் திரு. சி. வேதா சலனர் பி.ஏ., பி எல்., அவர்கட்கும் இப்பணியில் என்னை ஊக்கி வாழ்த்தி வழிகாட்டிய தமிழ்ப்பேரறிஞர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்கட்கும் என் அகங்கனிந்த நன்றியும் வணக்கமும் என்றும் உரியவாம்.

ஓருயிரன்ன நண்புபூண்டு உதவிவரும் நண்பர்திரு அ. இராம மூர்த்தி எம். ஏ., பி. டி., அவர்கட்கும், இந்நூல் அச்சேரத் துணைநின்று உதவிவரும் கெழுதகை நண்பரும் எங்கள் கல்லூரி முதல்வரும் ஆகிய திரு. கு. சிவமணி எம். ஏ., பி. டி., அவர் கட்கும் என்றும் நன்றியுடையேன். குறுகிய காலத்தில் சீரிய படங்களைக் கைம்மாறு கருதாது வரைந்துதவிய ஓவியர் திரு. தஞ்சைத்திரையன் அவர்கட்கும், அழகுற அச்சிட்டுதவிய அன்பர் திரு. நா. சின்னையா அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி யுரியவாம் ஆர்வத்தோடு செய்து உதவிய அச்சகத் தொழிலாள நண்பர்களை என்றும் மறத்தற்கியலாது; அவர்கள் வாழ்க!

இந் நூல் ஓரளவேனும் சிறுவர்களுக்குச் சுவையும் உணர் வும் தருமாளுல அதுவே யான்பெறும் பேரின்பமாகும். இதனைச் செந்தமிழ் அன்னையின் திருவடிகளில்வைத்து வணங்குகிறேன்.

அன்பன்,

*ச. பாலசுந்தரம்.*

..............................




## வாழ்த்தும் வணக்கமும்

(பொதுப்பகுதி)


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | கடவுள் வாழ்த்து | 9 |
| 2 | கலைமகள் வாழ்த்து | 10 |
| 3 | பாரத தேசம் | 11 |
| 4 | தாய்நாடு | 13 |
| 5 | தமிழன்னை | 15 |
| 6 | தாய்மொழி | 16 |


## மழலையமிழ்தம்

(முதற்பகுதி—பாலர் பாடல்)


| | | பக்கம் |
|---|---|---|
| 7 | சிரித்த குழந்தை | 17 |
| 8 | இன்ப உலகம் | 18 |
| 9 | எண் | 19 |
| 10 | வல்லெழுத்து | 20 |
| 11 | குட்டிப் பூனை | 22 |
| 12 | வலியும் ஒலியும் | 23 |
| 13 | நிலவே வா ! | 25 |
| 14 | காப்பது தொண்டு | 26 |
| 15 | கண்ணே வாடா ! | 27 |
| 16 | வண்டி | 29 |
| 17 | அழகு | 30 |
| 18 | மிதிவண்டி | 31 |
| 19 | இனியது | 33 |
| 20 | கோலம் | 34 |
| 21 | ஆடம்மா ஆடு ! | 35 |
| 22 | சிட்டுக்குருவி | 37 |
| 23 | யானை | 38 |
| 24 | சிட்டுக்குருவி கலியாணம் | 39 |
| 25 | எங்கள் பள்ளிக்கூடம் | 41 |
| 26 | துணையிருக்கும் கடவுள் | 43 |
| 27 | கரடிக்குட்டிக்குக் காதுகுத்து | 45 |
| 28 | சோலை | 47 |
| 29 | கிழிக்காதே | 48 |

## குதலைக்கனி

(இரண்டாம் பகுதி-சிறுவர்செய்யுள்)


| | | பக்கம் |
|---|---|---|
| 30 | எங்கள் வாழ்வு | 49 |
| 31 | செய்வது தொண்டு | 50 |
| 32 | மான்கன்று | 51 |
| 33 | அணில் | 53 |
| 34 | பூனை | 54 |
| 35 | காக்கை | 56 |
| 36 | வண்டு | 57 |
| 37 | பட்டம் | 59 |
| 38 | கிளி | 60 |
| 39 | பம்பரம் | 62 |
| 40 | கோழி | 63 |
| 41 | மயில் | 65 |
| 42 | பிறை | 66 |
| 43 | வாத்து | 68 |
| 44 | வட்ட நிலா | 69 |
| 45 | செய்தல்வேண்டும் | 71 |
| 46 | பற்றுக் கொள் | 73 |
| 47 | தெய்வப்புலவர் | 74 |
| 48 | கம்பர் | 75 |
| 49 | ஔவைப்பாட்டி | 77 |
| 50 | சிறப்பு | 79 |
| 51 | மாருதே | 80 |


## கிள்ளைமொழி

(மூன்றும் பகுதி-இளைஞர் இலக்கியம்)


| | | பக்கம் |
|---|---|---|
| 52 | எந்தாய் | 81 |
| 53 | மழை | 82 |
| 54 | வேனில் | 84 |
| 55 | மதி | 85 |
| 56 | சங்கத்தமிழ் | 87 |
| 57 | மலர் | 89 |
| 58 | ஆளப்பிறந்தீர் | 90 |
| 59 | விண்மீன் | 91 |
| 60 | மின்விளக்கு | 92 |
| 65 | தாமரைக்குளம் | 93 |
| 66 | காந்தியார் வாய்மொழி | 94 |
| 64 | அமரர் நேரு | 95 |
| 65 | பாரதி | 97 |
| 65 | வீர சிதம்பரனுர் | 99 |
| 66 | சோலை | 100 |
| 67 | பாரிவள்ளல் | 101 |
| 68 | தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை | 102 |


## மக்கட் செல்வம்

(நான்காம் பகுதி)


| | | பக்கம் |
|---|---|---|
| 69 | பிள்ளை | 106 |
| 70 | செந்தமிழ் வடிவே வா | 108 |
| 71 | தாயுள்ளம் | 109 |
| 72 | உலகமே குழந்தை | 111 |
| 73 | தேச வாழ்த்து | 112 |


-❖-

# பொதுப் பகுதி

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியை
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தம்செய் தீசன் அருள்பெற லாமே (திருமூலர்)




கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (திருவள்ளுவர்)

அன்பு மிகுந்த தெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா (பாரதியார்)




அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு —(திருவள்ளுவர்)

அன்பின் வடிவே அறிவுருவே !
இன்பம் அளிக்கும் திருவுருவே !

முத்தர் போற்றும் முதற்பொருளே !
புத்தர் புகழும் நற்பொருளே !

யேசும் நபியும் சங்கரரும்
நேசித் துரைக்கும் மங்களமே !

அருள்சேர் அமிழ்தப் பெருமழையே !
பொருளாய் விளங்கும் திருமொழியே !

முழுதும் நிறைந்த பரம்பொருளே !
தொழுது மகிழ்வோம் வரம் அருளே !

•••○•••




# கலைமகள் வாழ்த்து

வெள்ளைத் தாமரைப் பூவினிலே
விளங்கும் தாயே நாமகளே!
உள்ளத் தாமரை மலர்மீதே
ஒளிசெய் திருக்கும் கலைமாதே!

கலையின் வடிவாய் இருப்பவளே!
கல்விப் பொருளாய்ச் சிறப்பவளே!
தொலையா வாழ்வைத் தருபவளே!
தொழுவோர் நெஞ்சில் வருபவளே!

எண்சுவை இன்பம் அளிப்பவளே!
இலக்கிய உருவாய்க் களிப்பவளே!
பண்ணிசை வீணையில் உறைபவளே!
பாலர்கள் நாவில் நிறைபவளே!

சிந்தையில் அமிழ்தம் வார்ப்பவளே!
திறனும் அறிவும் சேர்ப்பவளே!
வந்தனை புரிவோம் வருவாயே!
வாழ்வும் வளமும் தருவாயே!




பாரத தேசம் பழந்தேசம்
பண்பு சிறந்து திகழ்தேசம் (பாரத)

சத்திய ஞானச் சுடர்வீசும்
தகவால் உயர்பா ரததேசம்
உத்தமர் காந்தி அருள்பேசும்
உறவால் வளர்பா ரததேசம் - (பாரத)

இப்புவி வாழ அறம்பேசும்
இனிமை மிகும்பா ரததேசம்
ஒப்புடை மைச்சீர் வளர்தேசம்
உயர்கலை யாவும் விளைதேசம் —(பாரத)

வானம் முட்டும் வடஇமயம்
வற்றுக் கடல்கள் முப்புறமும்
காணும் எல்லையுள் வாழ்தேசம்
கற்றவர் சேர்பா ரததேசம் —(பாரத)

கங்கை கோதா விரி, சிந்து
காவிரி வையை நீர்வந்து
பொங்கும் இன்பவ ளம்பூக்கும்
பொல்லா உலகப் பகைபோக்கும் —(பாரத)

தக்க மதங்கள் பலவாசம்
தன்மையில் யாவரும் ஒருநேசம்
மக்க ளினம்பல மொழிபேசும்
மனத்தில் பாரதத் தாய்ப்பாசம் —(பாரத)

வஞ்சகர் உள்ளே வரக்கூசும்
வலிமிகு வீரர் மலிதேசம்
நெஞ்சகம் அன்பால் புகழ்வீசும்
நேர்மை மிகும்பா ரததேசம் —(பாரத)






தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாய்என்று கும்பிடடி பாப்பா —(பாரதியார்)

தமிழ்நாடே செந் தமிழ்நாடு
தரைமேல் இல்லை இதற்கீடு —(தமிழ்)

அன்னை பிறந்ததும் இந்நாடு—என்
அப்பா பிறந்ததும் இந்நாடு
என்னைப் பெற்றதும் இந்நாடு—மனம்
இனிக்கும் அமிழ்தத் தமிழ்நாடு —(தமிழ்)

குன்றும் மலையும் காடுகளும்—வளம்
கொழிக்கத் திகழும் தமிழ்நாடு
தென்றல் வீசும் திருநாடு—கலைச்
செல்வம் கமழும் பெருநாடு —(தமிழ்)

காவிரி பாயும் தமிழ்நாடு—கடற்
கரையிற் சிறந்தது தமிழ்நாடு
கோவில் நிறைந்தது தமிழ்நாடு—அறக்
கொள்கை மலிந்தது தமிழ்நாடு —(தமிழ்)

கரும்பும் நெல்லும் விளைநாடு—நிலக்
கனிவளம் மிகுந்தது தமிழ்நாடு
அரும்பும் மலரும் சோலைகளும்—திகழ்
அன்பும் அறிவும் வளர்நாடு —(தமிழ்)

வள்ளுவர் ஔவை கம்பரெனும்—வான்
புலவர்கள் வாழ்ந்த தமிழ்நாடு
தெள்ளு தமிழ்க்கவி பாரதியார்—உளம்
சிலிர்க்கப் புகழும் தமிழ்நாடு —(தமிழ்)

சோழர் சேரர் பாண்டியரால்—முறை
செழிக்கச் சிறந்த தமிழ்நாடு
வாழச் செய்யுந் தமிழ்நாடு—புகழ்
வாழிய! வாழி எம் தாய்நாடே! —(தமிழ்)




வானமளந்தத னைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே —(பாரதியார்)

வாழ்க வாழ்க தமிழன்னாய் !
வணங்கி மகிழ்வோம் உன்முன்னே
சூழ்க இன்பம் தமிழன்னாய் !
துன்பம் ஒழிப்பாய் என்பின்னாய் !
சூழ்க நலமே தமிழ்த் தாயே !
சுடரொளி வீசித் திகழ்வாயே !
வாழ்க வாழ்க தமிழ்த் தாயே !
வந்தனை புரிவோம் அருள்வாயே !

பொங்கும் உணர்வே ! புவிமேலே
புதுமை வளர்த்தாய் கவியாலே !
எங்கும் நிறைந்தாய் எழிலரசி !
இனிமை மிகுந்தாய் தமிழரசி
சங்கம் மூன்றில் இருந்தாயே
சால்பு நிறைந்த பெருந்தாயே !
தங்கும் ஒளியே வாழியவே !
தமிழே ! வாழி வாழியவே !




சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா —(பாரதியார்)

"மம் மம்" "மம் மா" என்பேன்—அம்மா
மடிமேல் வைப்பாள் அன்பாய்.
"மம் மம் மம் மா" அம்மா—இந்த
அம்மா வுந்தமிழ் அம்மா!

"பப்பப்" "பப்பா" என்பேன்—அப்பா
பரிவாய்த் தோளில் வைப்பார்.
"பப்பப் பப்பா" அப்பா—இந்த
அப்பா வுந்தமிழ் அப்பா!

மாடுகள் "அம்மா" என்னும்—குயிலும்
மகிழ்வாய்க் "கூ கூ" என்னும்!
ஆடுகள் "அம்மே" என்னும்—காக்கை
அழகாய்க் 'காவ் கா" என்னும்

எல்லாம் தமிழே பேசும்—அதனல்
எனக்கும் தமிழ்மேல் பாசம்.
சொல்லாய் விளங்கும் தமிழே!—உன்னைத்
தொழுவோம் செய்வாய் அருளே!

முதற் பகுதி

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (திருவள்ளுவர்)




யாழொடுங் கொள்ளா பொழுதொடும் வாரா
பொருளறி வாரா ஆயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை (ஔவையார்)

நக்கீரர் கழகம்
எண்....
தேதி....
சென்னை - 81



# சிரித்த குழந்தை

அம்மா! அம்மா! என்று குழந்தை
ஆடி ஆடி அழுதது.

"இங்கா இங்கா" என்று குழந்தை
ஈரத் தரையில் புரண்டது.

உந்தி உந்திக் கையை ஆட்டி
ஊர்ந்து ஊர்ந்து பார்த்தது.

எட்டி எட்டிக் காலை நீட்டி
ஏங்கி ஏங்கி அழுதது

"ஐயா! கண்ணே முத்தே" என்று

ஒரு நொடிக்குள் அன்னை தான்
ஓடி வந்து தூக்கிப் பாலை
"ஔ' வாவ்" என்று புகட்டினாள்
"அஃ கஃ" என்று சிரித்ததே.

...o...




அக்கா அக்கா வாவாவா !
இங்கே வந்து பாரக்கா !
பச்சைக் கிளையில் தேன்சிட்டு
கொஞ்சிக் கொஞ்சிப் பாடுதுபார் !
கூட்டை விட்டே ஓடுது பார் !
கொண்டையை ஆட்டும் மரங்கொத்தி.
கொத்தித் தின்னும் கிளிப்பிள்ளை.
வந்தே பழத்தைக் கோதுதுபார் !
அப்பா அப்பா வாருங்கள் !
அம்மா அம்மா பாருங்கள் !
கொய்யாக் கனியை அணிற்பிள்ளை
பார்த்துக் கிளையில் குதிக்குதுபார் !
மெல்லப் பேசும் நாகணவாய்
கொவ்வைக் கொடிமேல் இருக்குதுபார் !
தாழ்ந்து பறக்கும் தோகைமயில்.
துள்ளித் திரியும் மான்கன்று.
சுற்றிப் பறக்கும் பொன்வண்டு.
இன்ப உலகம் இதுஅம்மா !




எண்கள் கல்வியின் கண்கள்
கண்கள் அறியும் கருவி
கருவியைக் கற்போம் துருவி —(எண்)

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் யார்க்கும் ஒன்று | 1 | க | I |
| திருக்குறள் அடிகள் இரண்டு | 2 | உ | II |
| தமிழின் பிரிவுகள் மூன்று | 3 | ங | III |
| தமிழ்நூற் பயன்கள் நான்கு | 4 | ச | IV |
| அறியும் பொறிகள் ஐந்து | 5 | ரு | V |
| அரசுக்கு அங்கம் ஆறு | 6 | சூ | VI |
| இன்னிசைப் பண்கள் ஏழு | 7 | எ | VII |
| இயங்கும் திசைகள் எட்டு | 8 | அ | VIII |
| வண்ண மணிகள் ஒன்பது | 9 | கூ | IX |
| வழங்குங் கைவிரல் பத்து. | 10 | ய | X |

3 இயல் இசை நாடகம், 4 அறம், பொருள், இன்பம், வீடு 5. மெய், வாய், கண், மூக்கு, செவி. 6. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு. அரண், 7. உழை, இளி, விளரி தாரம், குரல், துத்தம், கைக்கிளை. 9 வயிரம், வயிடூரியம், மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம், பதுமராகம்—முத்து பவளம்.

# க் ச் ட் த் ப் ற்

# வல்லெழுத்து

பக்கம் பக்கம் பக்கம்
பாடத்தை மறந்து வேடிக்கை செய்தால்
துக்கம் துக்கம் துக்கம்.

அச்சம் அச்சம் அச்சம்
அறிவும் திறனும் இருந்தால் எதுவும்
துச்சம் துச்சம் துச்சம்.

சட்டம் சட்டம் சட்டம்
தமிழகம் எங்கும் பாலர்கள் படிக்கும்
திட்டம் திட்டம் திட்டம்.

பித்தம் பித்தம் பித்தம்
பிழைசெய் யாத பிள்ளைக்குப் பெற்றோர்
முத்தம் முத்தம் முத்தம்.

அப்பம் அப்பம் அப்பம்
அன்பில் லாத நெஞ்சில் இருக்கும்
வெப்பம் வெப்பம் வெப்பம்.

சுற்றம் சுற்றம் சுற்றம்
தோழமை யோடு வாழ்ந்தால் உலகில்
கொற்றம் கொற்றம் கொற்றம்.

—:o:—

**தலை—தளை—தழை**

உயரத்தில் இருப்பது தலை
உடலைப் பிணிப்பது தளை
உண்பது ஆடுகள் தழை

**கலை—களை—கழை**

கருத்துக்கு இனிப்பது கலை
கழனியில் பறிப்பது களை
கரும்புக்கு ஒருபெயர் கழை.



# குட்டிப்பூனை



குட்டிப் பூனை வந்தது
எட்டி நாயைப் பார்த்தது.
பெட்டி மேலே சட்டியில்
கட்டித் தயிரைக் கண்டது.

கிட்டி வந்து சட்டியை
முட்டித் தள்ளி விட்டது
சட்டி உடைந்து போனது.
கட்டித் தயிரும் கொட்டவே,

சுட்டிப் பூனை நாவினால்
சப்புக் கொட்டித் தின்றது.
கட்டி இருந்த நாயினால்
சொட்டுக் கவலை இல்லையே.




"தண் தண் தண்"
தண் தண் என்னும் தண்டை ஒலி
தவறி விழுந்தால் மண்டைவலி

"விண் விண் விண்"
விண் விண் என்னும் வீணை ஒலி
வெயிலைக் கண்டால் விழிக்குவலி

"சல் சல் சல்"
சல் சல் என்னும் சலங்கை ஒலி
சண்டை பிடித்தால் தொண்டைவலி

"கில் கில் கில்"
கில் கில் என்னும் கிலு கிலுப்பை
கீழே விழுந்தால் வலிக்கும்மெய்
"பம் பம் பம்"
பம் பம் என்னும் பம்பை ஒலி
படிக்கா விட்டால் துன்பஒலி

"பும் பூம் பூம்"

பும் பூம் என்னும் சங்கின் ஒலி
பூனையைக் கண்டால் ஓடும்எலி

—※—

### வலி, வளி, வழி.

பிரம்படி பட்டால் வலி
பெருங் காற்றின்பேர் வளி
பெரியோர் செல்வது வழி

### கலி, களி, கழி.

மகிழ்ச்சியின் ஒருபெயர் கலி
மண்ணில் ஒருவகை களி
மலை மூங் கில் பேர் கழி.






நிலவே நிலவே! வா வா வா!
நித்திலக் குடையே! வா வா வா!
இலவம் பஞ்சின் திரளே வா!
இவனொடு ஆட ஓடிவா

வட்ட நிலாவே வா வா வா!
வானத் தாமரை மலரேவா!
கட்டிக் கரும்பாம் இவனோடு
கலந்து மகிழ்ந்தே ஆடவா!

அமிழ்தம் உண்ட நிலவே வா!
அறிவின் வடிவாம் இவனோடு
தமிழைக் கற்றுச் சுவைகொள்ளத்
தரைமீ திரங்கி ஓடிவா!

···o0o···

# காப்பது தொண்டு



வெல்லத்தில் மொய்ப்பது எறும்பு
வீரனுக்கு உயிரும் துரும்பு
பல்லுக்கு இசைவது கரும்பு
பகலில் முல்லை அரும்பு.

பானையைச் சுடுவது நெருப்பு
பாட்டிக்குச் சீடையில் வெறுப்பு
யானையின் உடம்பே கறுப்பு
ஞானத்தைப் பெறுவது சிறப்பு.

மலரில் மொய்ப்பது வண்டு
வளையில் இருப்பது நண்டு
உலகை அழிப்பது குண்டு
ஊரைக் காப்பது தொண்டு.




தமக்கை : க்ண்ணே வாடா தம்பி !
கையில் ஏனடா கம்பு ?
தெருவில் சென்ருல் வம்பு

தாய் : தம்பி ! உண்பாய் சோறு
சட்டையில் ஏனடா சேறு ?
தவறு செய்யாதே கூறு ?

தமக்கை : பாட்டி செய்த முறுக்கு
பானைக் குள்ளே இருக்கு
வாயில் போட்டு நொறுக்கு

தம்பி : அம்மா சுட்ட தோசை
அடுக்கித் தின்ன ஆசை
அக்கா தின்ருல் பூசை.

தமக்கை : கையில் லாத சட்டை
கழுத்தில் சின்ன பட்டை
காதி ரண்டும் குட்டை.

தம்பி : எனக்கு இரண்டு கோட்டு
எழுத நான்கு நோட்டு
இனிப்பது தமிழ்ப் பாட்டு.

---

உலை, உளை, உழை.

இரும்பைக் காய்ச்சுவது உலை
இடர்செய் தால்வரும் உளை
இளையபெண் மான்பெயர் உழை

வலை, வளை, வழை.

சுற்றிப் பின்னுவது வலை
சுண்டெலி இருப்பது வளை
சுரபுன்னை மரப்பேர் வழை

# வண்டி



வண்டி வண்டி வண்டி!
இரட்டை மாட்டு வண்டி
வண்டிக் காரன் நொண்டி
மாடு இரண்டும் சண்டி,

தொண்டிக் கட்டையை மாட்டி
தொழுவத் தில்நீர் காட்டி
உண்டி நிறைய ஊட்டி
ஓட்டி வந்தான் பூட்டி,

வண்டி நிறைய மூட்டை
மணல் நிறைந்த பாட்டை
வண்டிக் காரன் மாட்டை
வாட்டும் சிறிய சாட்டை,

வன்மை இல்லா மாடு
வழியில் செய்யும் கேடு.
நன்மை யாவும் தேடு!
நல்ல தமிழைப் பாடு!

----o0o----



# அ

# அ ழ கு

# கு



முகத்திற்கு அழகு கண்கள்
மொழிகட்கு அழகு பண்கள்
அகத்திற்கு அழகு தூய்மை
அறிவுக்கு அழகு வாய்மை.

கண்ணுக்கு அழகு அருளே
கவிகட்கு அழகு பொருளே
விண்ணுக்கு அழகு மதியே
வேலுக்கு அழகு நுதியே.

செயலுக்கு அழகு ஊக்கம்
திறனுக்கு அழகு ஆக்கம்
மயிலுக்கு அழகு ஆட்டம்
மானுக்கு அழகு ஓட்டம்.

நுதி—கூர்மை.




மிதிவண்டி மிதிவண்டி !

சின்னஞ் சிறிய மிதிவண்டி
    சிறுவர் ஓட்டும் மிதிவண்டி
பின்னும் முன்னும் சென்றுவரும்
    பிழைசெய் யாத மிதிவண்டி !

முன்னால் உருளை ஒன்றுண்டு
    முதுகில் இருக்க இடமுண்டு
பின்னால் உருளை இரண்டுண்டு
    பிடித்துக் கொள்ளக் கொம்புண்டு !

சுற்றி மிதித்தால் சுழன்றுவரும்
    சும்மா இருந்தால் நின்றுவிடும்
குற்றம் எதுவும் செய்யாது
    குழந்தையைக் கீழே தள்ளாது !

எண்ணெ ஊற்ற வேண்டாவே
எரியும் கரியும் வேண்டாவே
திண்ணெ மேலும் ஓட்டிடலாம்
தெருவில் விட்டும் ஓட்டிடலாம்!

'விண் விண்' என்றே வெற்றியுடன்
வீட்டிற் குள்ளே சுற்றிவரும்,
'கிண் கிண்' என்னும் மணிஓசை
'கிட்டு'க்கு இதிலே மிகஆசை.

---

## வரும்

காக்கை கரைந்தால் விருந்துவரும்
கண்டதை உண்டால் மருந்துவரும்
பாக்கைத் தின்றல் சோகைவரும்
பகைவரை வென்றல் வாகைவரும்






ஊருக்கு இனியது ஒற்றுமையே
　　உழவுக்கு இனியது ஆழஉழல்
பாருக்கு இனியது பகைநீங்கல்
　　பாதைக்கு இனியது பசுமரமே.

விருந்துக்கு இனியது இன்னுரையே
　　வேந்துக்கு இனியது செங்கோலே
மருந்துக்கு இனியது பட்டினியே
　　மலருக்கு இனியது நறுமணமே.

கவிகளுக் கினியது கம்பன்நூல்
　　கண்களுக் கினியது காலைவெயில்
செவிகளுக் கினியது செந்தமிழே
　　சிந்தைக்கு இனியது திருக்குறளே.




சின்ன சின்ன கோலம்
    தெருவில் வரையும் கோலம்
வண்ண வண்ணக் கோலம்
    வரைந் திடுவோம் நாளும்!

கொடியைப் போன்ற கோலம்
    கோண, வட்டக் கோலம்
விடியும் பொழுது நாளும்
    விரைந் திடுவோம் கோலம்!

புள்ளி வைத்த கோலம்
    பூம ணக்கும் கோலம்
அள்ளி யிட்ட கோலம்
    அழகு செய்யும் நாளும்!

மங்கலம் செய் கோலம்
    மாக்க ரைத்த கோலம்
பொங்கல் வருங் காலம்
    போட்டு வைப்போம் நாளும்!




அசைந்தா டம்மா அசைந்தாடு !
      அழகின் வடிவே அசைந்தாடு !
வசந்தக் காற்றே அசைந்தாடு !
      வளரும் சிலையே அசைந்தாடு !

சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு !
      சந்தனச் சிமிழே சாய்ந்தாடு !
தோய்ந்தா ரமிழ்தே சாய்ந்தாடு !
      தோகை மயிலே சாய்ந்தாடு !

வளைந்தா டம்மா வளைந்தாடு
      வண்ணக் கிளியே வளைந்தாடு
உளைசேர் யாழே வளைந்தாடு
      உயிரோ வியமே வளைந்தாடு

எழுந்தா டம்மா எழுந்தாடு!
இன்பச் சுடரே எழுந்தாடு!
கொழுந்தே மலரே எழுந்தாடு!
கொய்யாக் கனியே எழுந்தாடு!

குனிந்தா டம்மா குனிந்தாடு!
குறையா நிலவே குனிந்தாடு!
கனியே தேனே குனிந்தாடு!
கவிதைப் பொருளே குனிந்தாடு!

நிமிர்ந்தா டம்மா நிமிர்ந்தாடு!
நித்தில விளக்கே நிமிர்ந்தாடு!
தமிழின் சுவையே நிமிர்ந்தாடு!
தாமரை மலரே நிமிர்ந்தாடு!




சிட்டுக் குருவி! சிட்டுக் குருவி!
சிறகைத் தொட்டால் பட்டுக் குருவி
கொட்டைப் பாக்குச் சிட்டுக் குருவி
குருவிக் கெல்லாம் குட்டைக் குருவி.

கதைகள் பேசிக் கத்தும் சிட்டு
கண்ணுக் கழகாய் இருக்கும் சிட்டு
விதையை பொறுக்கித் தின்னும் சிட்டு
வீட்டில் கூட்டைக் கட்டுஞ் சிட்டு!

நெல்லை அலகால் கொத்தி உரிக்கும்
நினைக்கும் பொழுது சிறகை விரிக்கும்
கொல்லை முழுதும் சென்று பறக்கும்
குஞ்சுக ளிடத்தில் அன்பு சுரக்கும்!

கம்புக் கொல்லையில் கதிரைக் கொத்தும்
“கரீச் சிச்” என்று கனிவாய்க் கத்தும்
கொம்புக் கிளையில் தொட்டில் ஆடும்
குருவிக ளோடே அழகாய்ப் பாடும்!




யானை ! யானை ! யானை !

கருமை யான வண்ண யானை
கரும்பை விரும்பித் தின்னும் யானை
பெருமை யான விலங்கு யானை
பிளிறிக் கொண்டே ஓடும் யானை.

மலையைப் போல இருக்கும் யானை
மரத்தை முறித்தே உண்ணும் யானை
நிலைநில் லாமல் அசையும் யானை
நீரை உரிஞ்சிக் குடிக்கும் யானை.

உரலைப் போன்ற கால்கொள் யானை
உலக்கை போன்ற துதிக்கை யானை
அரசர் ஏறிச் செலுத்தும் யானை.
ஆடி அசைந்து நடக்கும் யானை

முறத்தைப் போல செவிகொள் யானை
முகத்தில் கொம்பை உடைய யானை
வெறுக்கும் தீங்கு செய்த பேரை
மிதித்துக் கொல்லும் மதங்கொள் யானை.




சிட்டுக் குருவி கலியா ணத்தில்
சீர்வரிசைகள் ஏராளம்!
சீர்வரிசைகள் ஏராளம்! (சிட்டு)

குள்ள வாத்துக் கூட்டம் வந்து
குத்து விளக்கை ஏற்றின
வெள்ளைப் புருக் கூட்டஞ் சேர்ந்து
விரிந்த பந்தல் போட்டன (சிட்டு)

காக்கை எல்லாம் கூடி வந்து
காயும் கனியும் சேர்த்தன.
தூக்க ணாங்கு ருவிக் கூட்டம்
தோர ணங்கள் கட்டின (சிட்டு)

பச்சைக் கிளிகள் பாடி வந்து
பட்டுப் புடவை உடுத்தின.
சிச்சி லிப்புள் சீவி முடித்துச்
சிங்கா ரங்கள் செய்தன (சிட்டு)

நாரை எல்லாம் கூடி வந்து
நகைகள் பூட்டி விட்டன.
தாராப் பறவை தத்தி வந்து
தண்டையை காலில் மாட்டின (சிட்டு)

குயில்கள் கூடி வீணை மீட்டிக்
குரலி சைத்துப் பாடின.
மயில்கள் தோகை விரித்துக் கொண்டு
மகிழ்ந்து நடனம் ஆடின (சிட்டு)

மாப்பிள் ளையாய் இருந்த சிட்டு
மணையில் ஏறி அமர்ந்தது.
தோப்பில் உள்ள குருவி எல்லாம்
சுற்றி வந்து கூடின (சிட்டு)

வானம் பாடிக் குருவிக் கூட்டம்
வாழ்த்துப் பாடி நின்றன.
கானங் கோழிக் கூட்டம் வந்து
கலியா ணத்தை முடித்தன (சிட்டு)

சிட்டுக் குருவி கலியா ணத்தில்
சிறந்த விருந்து சாப்பாடு.
கொட்டு முழக்கு ஊர்வ லத்தில்
குருவிக் குச்சீர் ஏராளம் (சிட்டு)

# எங்கள் பள்ளிக்கூடம்



*பள்ளிக் கூடம் எங்க ளோடு வந்துபாரம்மா !*
*பாலர் நாங்கள் படிக்கும் அழகைச் சிறிதுகேளம்மா !*
*—(பள்ளி)*

அழுக்கில் லாமல் சீருடையை
அணிந்து செல்லுவோம்
அண்ணா சொல்லும் பாடங்களை
அறிந்து கொள்ளுவோம்
வழக்க மாக வீட்டுப்பாடம்
வரைந்து கொள்ளுவோம்
மணிய டித்தால் வரிசையாக
நடந்து செல்லுவோம். —(பள்ளி)

ஆத்தி சூடி கொன்றைவேந்தன்
நூலைப் படிப்போம்
அண்ணா சொல்லிக் கொடுத்தபடி
நாங்கள் நடப்போம்
பாத்தி கட்டிச் செடிவளர்த்து
மாலை தொடுப்போம்
பாட்டுப் பாடி வேடம்போட்டுக்
கொண்டு நடிப்போம். —(பள்ளி)

புதிய பாடம் படித்தபின்பு
கணக்குப் போடுவோம்
பூம ணக்கும் தோட்டத்திலே
ஆடிப் பாடுவோம்
**மதிய உணவு பள்ளியிலே**
**உண்ணக் கூடுவோம்**
மாலை யிலே பந்தடித்தே
ஓடி யாடுவோம். (பள்ளி)

திருத்த மாகப் படித்துப்பரிசு
சிறப்புடன் சேர்ப்போம்
சிட்டுக் குருவி போலமகிழ்ந்து
திரிந்துமே பார்ப்போம்
பருத்திப் பஞ்சை ராட்டையிலே
வைத்து நூல்நூற்போம்
பாலர் சபையில் மந்திரியாய்ப்
பதவிகள் ஏற்போம். (பள்ளி)






ஆட ஆட உடம்பிலே
அழகும் உரமும் ஏறுமே.
தேடத் தேடச் செல்வமும்
சிறப்பும் வந்து சேருமே.

அறைக்க அறைக்கச் சந்தனம்
அதிகம் மணந்து நாறுமே.
இறைக்க இறைக்கக் கிணற்றுநீர்
எழுந்து மேலும் ஊறுமே.

மெல்ல மெல்லக் கரும்புதான்
மிகுதி யாக இனிக்குமே.
சொல்லச் சொல்லப் பாட்டுகள்
துலங்கி ஓசை மணக்குமே.

புடைக்கப் புடைக்கத் தூசுபோய்
பொருளும் தூய்மை ஆகுமே.
படிக்கப் படிக்கக் கல்வியும்
படியும்; மடமை போகுமே.

திரிக்கத் திரிக்கப் பஞ்சிநூல்
சிறந்து வலிமை ஆகுமே.
சிரிக்கச் சிரிக்கத் துன்பமும்
தேய்ந்து மறைந்து போகுமே.

கொடுக்கக் கொடுக்கப் புகழெலாம்
கூடி வந்து நிறையுமே.
எடுக்க எடுக்கப் பெட்டியில்
இருக்கும் பொருள்கள் குறையுமே.

எழுத எழுத எழுத்திலே
இனிமை அழகு படியுமே.
தொழுது தொழுது வேண்டினால்
துணையிருக்கும் கடவுளே.






காட்டில் கரடிக் குட்டிக்குக்
காது குத்துக் கலியாணம்!
கூட்ட மாக விலங்கெல்லாம்
குதித்து வந்து சேர்ந்தன.

பரிகள் எல்லாம் கூடியே
பந்தல் போட்டு வைத்தன.
வரிக்கு திரைகள் வந்துமுன்
வரவேற் புக்கள் தந்தன.

குள்ள நரிகள் கூடியே
கொட்டு மேளம் வைத்தன.
புள்ளி மான்கள் வந்தன,
புதிய நடனம் ஆடின.

ஒட்ட கங்கள் யாவையும்
உணவு சமைத்து வைத்தன.
பட்ட ணத்து யானைகள்
பந்தி வைக்க வந்தன.

கழுதை பெரிய குரலினுல்
கட்டி யங்கள் கூறின.
பழைய புலிக்குக் கரடிகள்
பாக்கு வைக்க வில்லையாம்

புலிக்குக் கோபம் வந்தது,
புதரை விட்டே எழுந்தது,
உலுக்கி உடம்பை அசைத்தது,
உறுமிக் கொண்டு பாய்ந்தது,

காட்டில் உள்ள விலங்கெலாம்
கலங்கி நடுங்கி அஞ்சியே,
ஓட்ட மாக ஓடின
ஒன்றும் நிகழ வில்லையே.



நக்கீரர் கழகம்
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி






தோழியர் யாவரும் சேருங்கள் !
சோலைக்குப் போவோம் வாருங்கள் !
யாழிசை போலப் பாடிடுவோம் !
யாவரும் கூடி ஆடிடுவோம் !

முல்லைக் கொடியில் மணம்வீசும்,
முரலும் வண்டுகள் பண்பேசும்,
மெல்லிய தென்றல் குளிர்வீசும்,
வெள்ளைப் புறாக்கள் மொழிபேசும்.

மயில்கள் தோகை விரித்திருக்கும்,
மலர்கள் யாவும் சிரித்திருக்கும்,
குயில்கள் பாடிக் கொண்டிருக்கும்,
கொம்பு களில்மலர்ச் செண்டிருக்கும்.

பிள்ளை அணில்கள் கூவிவரும்,
பேசிக் கொண்டே தாவிவரும்,
கொள்ளை இன்பம் மாலையிலே,
குவியும் அந்தச் சோலையிலே.

----o0o----




சுண்ணாம்புக் கோடுகள் கிழிக்காதே!
தோழரை வைது பழிக்காதே!
கண்ணாடிப் பொருளை உடைக்காதே!
'கருமி'எனப் பேர் எடுக்காதே!

வாயால் துணியை மெல்லாதே!
வண்டியின் பின்னே செல்லாதே!
நாயைக் கல்லால் எறியாதே!
நல்லவை செய்தல் குறையாதே!

வீதியின் நடுவே நடக்காதே!
விளையும் பயிரைக் கெடுக்காதே!
சாதியும் சமயமும் பேசாதே!
சத்தியம் பேசிடக் கூசாதே!

## இரண்டாம் பகுதி

மதிமயக் குருஅ மாதவர்க் காயினும்
மதலையர் வழங்கும் குதலையந் தீஞ்சொல்
தண்ணென மிழற்றும் பண்ணினு மினிதே'




குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர் மழலை கேட்டல் அதனினும் இனிதே
(பூதஞ்சேந்தனார்)




சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கஞ் செழிக்கச் செய்வீர் ! —பாரதியார்.

---

அன்னைத் தமிழே ஆருயிரே !
  அன்பே அறிவே அருளொளியே !
தென்னங் குமரி நாட்டினிலே,
  செழித்தே வளரும் தீந்தமிழே !
கன்னற் சாறே கற்கண்டே !
  களிப்பை ஊட்டும் தெள்ளமுதே !
உன்னை அறிந்தே மகிழ்வோமே.
  உலகில் அறிவால் திகழ்வோமே.

நெஞ்சில் வீரம் விளைப்பாயே !
  நினைவார் கருத்தில் துளிர்ப்பாயே !
கொஞ்சும் கிளியும் குயிலும்போல்,
  கூறும் இசையைத் தருவாயே !
செஞ்சொற் கல்வி சேர்ப்பாயே !
  திருவும் புகழும் அருள்வாயே !
தஞ்சம் எமக்கு நீயம்மா !
  தமிழே ! எங்கள் வாழ்வம்மா !



நக்கீரர் கழக
எண்..........
தேதி..........
சென்னை

# செய்வது தொண்டு



ஆற்றில் மிதப்பது தெப்பம்—கடல்
அலையிற் செல்வது கப்பல்.
சேற்றில் திரிபவை மீன்கள்—தலைச்
சிக்கில் வளர்பவை பேன்கள்.

காட்டில் திரிவது சிங்கம்—பெருங்
கடலில் விரைவது வங்கம்.
ஏட்டில் இருப்பது பாடம்—அதை
எண்ணு திருப்பது மூடம்.

கடலில் இருப்பது உப்பு—கல்வி
கல்லா திருப்பது தப்பு.
உடலில் இருப்பது அழகு—நாளும்
உழைப்பால் உயர்ந்திடப் பழகு!

வானில் மிதப்பது திங்கள்—நமது
வயிற்றை நிறைப்பது பொங்கல்!
தேனில் மொய்ப்பது வண்டு—நாடு
செழிக்கச் செய்வது தொண்டு.

—❖❖❖❖—



# மான்கன்று

சின்னஞ் சிறிய மான்கன்றே!
தேடிக் கண்டோம் உனை நன்றே.
பொன்னின் நிறமே நின்மேனி,
புல்லுந் தழையும் உன்தீனி.

துள்ளித் தாவித் திரிகின்றாய்!
தொட்டால் அஞ்சிப் பரிகின்றாய்!
கொள்ளை அழகாய் இருக்கின்றாய்!
குதித்துச் சென்றே மறைகின்றாய்!

பளிங்குக் கண்ணால் பார்க்கின்றாய்.
பச்சைப் புல்லைத் தீர்க்கின்றாய்.
களங்கம் இல்லாச் சிறுமானே!
கனியும் காயும் தருவேனே.

கொம்பு முளைத்தால் தலைமேலே
கூறிடு வார்உனைக் கலைமானாய்!
அம்புலி உள்ளே இருப்பாயாம்,
அதனைக் கேட்டால் சிரிப்பேயாம்.

பட்டில் எழுதும் ஓவியமே!
பாலர்கள் மகிழும் காவியமே!
வட்டப் புள்ளிகள் கண் போலே
வரைந்தவர் யார்உன் உடல்மேலே?

அல்லியின் இதழோ உன்காது?
ஆசை கொண்டேன் உன்மீது.
புல்வாய் மறியே உழையேவா!
பொழுது மறைந்தது போவோம்வா!






*அணிலே! அணிலே! அழகணிலே!*
*மணிபோல் சிறிய விழி அணிலே!*

முகமோ முந்திரிப் பழம் போலே!
முதுகோ வெள்ளரிக் காய் போலே!
அகமே மகிழ்வேன் உன்னாலே!
ஆடித் திரிவாய் முன்னாலே!

வேழக் கரும்பின் மேலிருக்கும்
வெண்பூப் போலுன் வாலிருக்கும்.
கூழைக் கையால் பறிக்கின்றாய்
கொட்டையை எப்படிக் கொறிக்கின்றாய்?

இனிதே 'கிக்கீ' என்கின்றாய்
எல்லாக் கனியும் தின்கின்றாய்.
கனியை முழுதும் உண்ணாமல்
கடித்துக் குறையப் பண்ணாதே!

துன்பம் என்றே தெரியாமல்
சுட்டவர் யார் மூ வரியாக?
அன்பும் அறிவும் உன்போலே
அளிப்பாய் அணிலே என்பாலே!




நல்ல நல்ல பூனை!
　　நமது வீட்டுப் பூனை.
செல்ல மான பூனை
　　திறந்தி டுந்தயிர்ப் பானை.

மெல்ல வந்து நின்று
　　'மியாவ் மியாவ்' என்று
சொல்லும் நல்ல பூனை
　　சுருதி மீட்டும் வீணை.

பக்கம் நீண்ட மீசை
　　பாலைக் குடிக்க ஆசை.
நக்குங் காலை நீட்டி
　　நடக்கும் வாலை ஆட்டி.

கண்கள் இரவில் நெருப்பு
　　கடைந்த மோரில் விருப்பு.
வண்ணம் வெள்ளைக் கருப்பு
　　வறுத்த பொருளில் குறிப்பு.

வாலை நீட்டிப் பாயும்
வந்த எலிகள் சாயும்.
மூலை முடுக்கில் மோப்பம்
முடிந்த பின்னர் ஏப்பம்.

பதுங்கி இரவில் மேயும்
பகலில் தூங்கி ஓயும்
ஒதுங்கித் தாவி ஓடும்
உறவைக் கண்டால் பாடும்.




*காக்கை இது காக்கை*
*கண்டங் கரிய காக்கை—(காக்கை)*

காலை எழுந்து குளிக்கும்
கரைந்து இனத்தை விளிக்கும்
மாலை மேற்கில் பறக்கும்
மறைந்து கிளையில் இருக்கும் (காக்கை)

வேப்பம் பழத்தை விழுங்கும்
வீட்டுக் கூரையில் முழங்கும்
ஆப்பக் கடையை எண்ணும்
அழுகல் பொருளைத் தின்னும் (காக்கை)

நாக்கை வளைத்துக் கரையும்
நட்பைத் தேடி விரையும்
மூக்கில் உணவை அடக்கும்
முதுகை ஆட்டி நடக்கும் (காக்கை)

ஆக்க மெல்லாந் தேடி
அன்பு கொண்டு கூடி
காக்கை போல உறவு
கலந்து வாழ்தல் அறிவு (காக்கை)




வண்டு!  வண்டு!  வண்டு!

கண்ணைப் போல சிறந்த வண்டு
கருமை யான நிறத்து வண்டு
வண்ண மலரைத் தேடிக் கொண்டு,
வானில் திரிந்து பறக்கும் வண்டு.

மலர்ந்த பூவின் தேனை உண்டு,
மகரந் தத்தைக் காலிற் கொண்டு.
கலந்து மலரில் வைக்கும் வண்டு,
காய்உ ண்டாகச் செய்யுந் தொண்டு.

மலரின் இதழைத் திறக்கும் வண்டு
மணத்தை எங்கும் பரப்பும் வண்டு
புலவர் பாட்டில் சிறக்கும் வண்டு
பொந்துக் குள்ளே இருக்கும் வண்டு

பறக்கும் சிறகு முதுகில் இரண்டு
பாடும் சிறகு அகத்தி லிரண்டு
இறக்கை விரித்துப் பறக்கும் வண்டு
இசையை 'ரீம்ம்'எனப் பாடும் வண்டு

மரத்தைத் துளைக்கும் வண்டும் உண்டு
மதிப்பில் லாத வண்டும் உண்டு
வருத்தம் செய்யும அவற்றைக் கண்டு,
வழியிற் செல்வோம் விலகிக் கொண்டு.

இன்பத் தேனை உண்ணும் வண்டு
ஈச்சம் பழம்போல் இருக்கும் வண்டு
அன்புக் கண்ணு! வண்டைப் போல
அருந்த மிழ்த்தேன் உண்போம் நாளும்.






*பாலர் மகிழும் சிறுபட்டம்*
*பனிக்கா லத்தில் விடும்பட்டம்*

நீலப் பட்டம் பெரும்பட்டம்
நெடுவா னத்தில் குறும்பட்டம்
வாலில் லாத சிறுபட்டம்
வட்டம் போட்டு விழும்பட்டம்.

வயிற்றில் நூலைக் கட்டிடுவார்
வானில் பறக்க விட்டிடுவார்
கயிற்றில் நின்றே பறந்திடுமே
காகிதப் பட்டம் சிறந்திடுமே.

பருந்தைப் போலே வட்டமிடும்
பனிமே கத்தைத் தொட்டுவரும்.
வருந்திப் பட்டம் விட்டனரே
வானக் கப்பலைக் கட்டினரே !

பிடிக்கும் நூலால் விடும்பட்டம்
பெருமை இல்லா வெறும்பட்டம்
படிக்கும் நூலால் பெறும்பட்டம்
பணமும் புகழும் தரும்பட்டம்.

···oO···




# கிளி

பச்சைக் கிளியே பறந்துவா!
பாலும் பழமும் அருந்தவா!
இச்சைப் படியே ஆடவா!
இசையைச் சிறிதே பாடவா!

அத்திப் பழமோ உன்மூக்கு?
அழகாய்ப் பேசும் உன் நாக்கு
தத்தைக் கிளியே! அஞ்சுகமே!
தங்கி இருப்பாய் நெஞ்சகமே!

முற்றுக் கனியைக் குடைந்தாயோ?
மூக்குச் சப்பை அடைந்தாயோ?
சுற்றிச் சுற்றிப் பறக்கின்றாய்;
தோகை விசிறி விரிக்கின்றாய்.

கூண்டில் அடைப்பார் இலைஇங்கே;
குறையா திசைப்பாய்த் தென்பாங்கே!
வெண்டைக் காய்போல் வாலாட்டு!
விரும்பிக் கேட்போம் தாலாட்டு.

வாசலில் பூனையைக் கண்டாயோ?
வாயை மூடிக் கொண்டாயே?
பேசச் சொல்லிக் கெஞ்சிடுவோர்
பிடித்துக் காலை கொஞ்சிடுவார்.

அஞ்சு நிறத்தோ டிருந்தாயே!
அருகில் வா! என் விருந்தாயே.
கொஞ்சி மகிழ்வேன் வருவாயே!
குதலை இன்பந் தருவாயே!






*பம்பரமாம் பம்பரம்*
*பாய்ந்து சுற்றும் பம்பரம்!*

தம்பி சுற்றும் பம்பரம்
தரையில் ஆடும் பம்பரம்
கொம்பில் செய்த பம்பரம்
குமிழ் அமைத்த பம்பரம்

சட்டி போன்ற பம்பரம்
சங்கு போன்ற பம்பரம்
கொட்டைப் பாக்கு பம்பரம்
குழிப றிக்கும் பம்பரம்

ஒற்றைக் காலில் ஆடுமே
'உர்ர்' என்று பாடுமே.
சுற்றி நூலைச் சொடுக்கிப்பார்!
தூக்கிக் கையில் எடுத்துப்பார்!

உலகம் போலச் சுற்றுமே
ஒருவன் சுழற்றும் கயிற்றினால்.
நிலவும் கயிறு நீங்கினால்
நிலத்தில் கிடந்து தூங்குமே!

...oOo...




# கோழி

கொக்க ரக்கோ கோழி
　　கூவுதுபார் தோழி!
செக்கச் சிவந்த கோழி
　　சேவற் கோழி வாழி! —(கொக்க)

பக்கம் வந்து கூடும்
　　பருந்தைக் கண்டால் ஓடும்.
திக்கு வெளுக்கும் நாழி
　　தெரிந்து கூவும் கோழி —(கொக்க)

அருமை யாகப் பாடும்
　　அருகில் சென்ருல் ஓடும்.
தெருவில் சண்டை போடும்
　　தீனி குப்பையில் தேடும் —(கொக்க)

சிவந்த கொண்டையை ஆட்டி
　　சிறகி ரண்டையும் காட்டி
கவிந்த தலையை நீட்டி
　　கதறும் இருளை ஓட்டி. —(கொக்க)

செருக்கு மிகுந்து நடக்கும்
சிலிர்த்துச் சிறகை மடக்கும்.
பொறுக்கித் தின்று கிடக்கும்
போரில் பகையை முடுக்கும் —(கொக்க)

தூக்கும் உச்சி நெருப்பு
தோகை வண்ணக் கறுப்பு
மூக்கு முந்திரிப் பருப்பு
முகட்டுக் கூரையில் இருப்பு —(கொக்க)

காலால் குப்பையைச் சீக்கும்
கத்திக் காலால் தாக்கும்
மேலால் வானைப் பார்க்கும்
வீர னைப்போல் நோக்கும் —(கொக்க)





# ஆடும் மயில்

ஆடும் மயிலே ! நடம் ஆடும் மயிலே !
ஆயிரங்கண் தோகைவிரித் தாடும்மயிலே!
காடுமலை சோலையெங்கும் ஆடும்மயிலே !
கார்முகிலைக் கண்டுநடம் ஆடும்மயிலே !

காலையிளஞ் சூரியன்போல் தோகைவிரிப்பாய் !
காலைத்தூக்கி அடிஅசைந் தோகைவிரிப்பாய்!
மாலையிளம் மேகமெனத் துள்ளிவருவாய் !
மண்மகளின் சாயல்உரு வாகிவருவாய்.

தோழரொடு காணவந்தேன் முன்னம்வருவாய் !
சோளம்கம்பு கேழ்வரகு தின்னவருவாய் !
ஏழிசையுள் ஓரிசையை ஓதும்மயிலே !
இவ்வளவு வண்ணம்உனக் கேதுமயிலே ?

உச்சிக்கொண்டை ஆட்டிஉயர் வாகநடிப்பாய்
ஓடிவரும் நச்சுப்பாம்பைக் கொத்திமடிப்பாய்
பச்சைத்தோகை விரித்தாடும் கானமயிலே !
பாரதத்தின் நற்பறவை ஆனமயிலே
— (ஆடும்மயிலே)

•••oOo•••




வெள்ளிப் பிறையே வா வா வா !
விளங்கும் வான விளக்கே வா !
பிள்ளைக் கனியாம் இவனோடு
பேசிப் பாட ஓடிவா !

வானப் பிறையே வா வா வா !
வளைந்த வில்லே வா வா வா !
கூனற் பிறையே வா வா வா !
குழந்தை இவனொடு ஆடவா !

மதியே பிறையே வா வா வா !
மல்லிகை மாலையின் புரியேவா !
நிதியே ஒளியே வா வா வா !
நிலத்தில் இவனொடு ஆடவா !

ஆனைக் கொம்பின் வடிவே வா !
அரிந்த பூசணிக் கீற்றேவா !
கூனைப் போக்கும் வழிசொல்வேன் !
குழந்தை இவனொடு ஆடவா !

ஓடம் போலே வானத்தில்
 ஊர்ந்து செல்லும் பிறையே வா!
ஆடும் சிறுவன் இவனன்பால்
 அழைக்கின் றான்நீ ஆடவா!

வெள்ளைத் தாமரை இதழைப்போல்
 விண்ணில் இருக்கும் பிறையே வா!
துள்ளி அழைக்கும் இவனோடு
 தோழமை கொண்டே ஆடவா!

கலைபதி னாறும் வளர்ந்திடவே
 காண்பாய் பிறையே! உயிருள்ள
சிலையாம் இவனொடு இன்பாகச்
 சிறுதேர் உருட்டி ஆடவா!




குவ்வாக் குவ்வா வாத்து
கொண்டை இல்லா வாத்து.—(குவ்வா)

நெட்டைக் கழுத்து வாத்துப்பார்!
நீரில் மிதக்கும் வாத்துப்பார்!
பட்டை மூக்கு வாத்துகள்
பந்து போன்ற வாத்துகள் —(குவ்வா)

முதுகை அசைத்து நடந்திடும்.
முழுகி நீரைக் குடைந்திடும்.
அதிக நேரம் குட்டையில்,
அலைந்து போடும் முட்டையை—(குவ்வா)

தோலி ருக்கும் காலிலே
துடிப்பி ருக்கும் வாலிலே
சேலி ருக்கும் ஏரியில்,
சேர்ந்து மேயும் நீரினில் —(குவ்வா)

சேற்றில் உள்ள அழுக்கையே
தேடி உண்ணும் முழுக்கவே.
ஆற்றில் ஓடும் படகுபோல்
அசைந்து நீந்தும் நெடுகவே —(குவ்வா)

—:o:—

நக்கீரர் கழகம்
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி






தேனைச் சிந்தும் சின்னநிலா!
சிறுவர் காணும் தெய்வநிலா.
மானைக் காட்டி மகிழ்ச்சிஉலா
வானில் வந்தது வட்டநிலா!

முத்தைப் போன்ற முழுமைநிலா!
முன்னே சென்றால் ஓடும்நிலா.
சொத்தைப் பூசணி போன்றநிலா.
தோழர்க் கெல்லாம் சொந்தநிலா.

விளக்கைப் போல்ஒளி வீசும்நிலா.
விடிந்தால் மறையும் வெள்ளிநிலா.
இளைத்துப் பிறையாய் மாறும்நிலா.
இனிதே பின்பு வளரும்நிலா.

மருவை முயலாக் கொண்டநிலா.
வானப் பந்தலில் பூத்தநிலா.
இரவில் தோன்றி இனிக்கும்நிலா.
இல்லாக் கிழவியைக் கொண்டநிலா!

பாலை உண்டு வந்தநிலா.
பந்தைப் போல உருண்டநிலா.
காலைப் பொழுதில் மங்கும்நிலா.
கரியைப் பூசிக் கொண்டநிலா.

கையும் காலும் அற்ற நிலா.
காதும் மூக்கும் சற்றுமிலா
மெய்யில் லாத முகத்துநிலா.
வெள்ளித் தட்டுப் போன்றநிலா.

சின்னஞ் சிறிய செயற்கைநிலா
திரிவதைப் பார்யாம் விட்டநிலா!
இன்னும் செய்வோம் பறக்கும்நிலா,
இனிவரு வோம்உன் இடத்தில்உலா



# செய்தல் வேண்டும்

விடியற் காலை எழுந்திருத்தல் வேண்டும்—வீட்டின்
விதிப்படி நாட்கடன்கழித்தல் வேண்டும்.
உடல்கழுவித் தூய்மைசெய்தல் வேண்டும்—வேறு
உடையணிந்து பாடம்பயில வேண்டும்.

தாய்அளிக்கும் உணவைஉண்ண வேண்டும்—பின்பு
தலையைவாரித் தகுதிசெய்தல் வேண்டும்.
தூய்மையான உடைஉடுத்தல் வேண்டும்—நல்ல
தோழரோடு பள்ளிசெல்ல வேண்டும்.

பழக்கமான வழிநடக்க வேண்டும்—தெருவில்
பாடம்படிக் காமல்செல்ல வேண்டும்.
வழியில்விளை யாட்டைநீக்க வேண்டும்—வண்டி
மாடுவரும் போதுஒதுங்க வேண்டும்.

மலர்ந்தமுகத் தோடிருக்க வேண்டும் - மற்ற
மாணவர்பால் அன்புசெய்ய வேண்டும்
கலந்துபடித்து அறிவுகொள்ள வேண்டும்—நன்கு
கற்றபின்னர் ஐயம்நீங்க வேண்டும்.

கேட்டபோது விடைகொடுத்தல் வேண்டும் — நல்ல
கேள்வியினால் மடமைபோக்க வேண்டும்.
வாட்டமின்றிக் கல்விகற்க வேண்டும்—வேறு
வழியிற்செல்லும் மனத்தைஅடக்க வேண்டும்.

மாலைவேளை ஓடியாட வேண்டும்—உடல்
வலிமைகொள்ளும் பயிற்சிசெய்தல் வேண்டும்
சோலையிளந் தென்றல்உலா வேண்டும்—நல்ல
தோழரோடு பேசிமகிழ்தல் வேண்டும்.

அந்திக்குமுன் வீடுஅடைதல் வேண்டும்—வீட்டில்
அம்மாசொல்லும் அலுவல்பார்க்க வேண்டும்.
சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டும் — நாளும்
சேர்ந்தபாடம் பயின்றுதெளிய வேண்டும்.

நல்லறிஞர் நூலைப்பயில வேண்டும்—என்றும்
நன்றிமறவாதிருத்தல் வேண்டும்.
நல்லொழுக்கம் தேர்ந்துநடக்க வேண்டும்—பின்னர்
நள்ளிரவுக் குள்துயிலல் வேண்டும்.

வாய்மையன்பு தூய்மைபெற வேண்டும்— நம்மை
வாழவைக்கும் நாட்டைப்போற்ற வேண்டும்
தாய்மொழிபால் அன்புகொள்ள வேண்டும் போலிச்
சாதிமத பேதம்நீங்க வேண்டும்.




*பற்றுக் கொள்ள வேண்டும்—பண்பு*
*கற்றுக் கொள்ள வேண்டும்—(பற்று)*

வாச மலரில் பற்று என்றும்
வாழும் நாட்டிற் பற்று.
பேசும் மொழியிற் பற்றுக்—கொண்ட
பெரியோரைப் பின் பற்று! (பற்று)

பெற்ற வர்மேற் பற்று—நமது
பிறந்த நாட்டிற் பற்று.
கற்ற வர்மேல் பற்று—நன்மை
கண்டு நீபின் பற்று! (பற்று)

நடுவு நிலையிற் பற்று—சிறந்த
நன்மை செய்யும் பற்று.
கடமை யின்மேற் பற்றுக் - கொண்டோர்
கடவு ளாம்பின் பற்று! (பற்று)




தெய்வப் புலவர் பெரியார்—அவர்
திருக்குறள் நூலுக்கு உரியார்—இந்த
வையம் புகழும் பெரியார்—திரு
வள்ளுவர் என்னும் நெறியார். (தெய்)

பற்பல நீதிகள் தந்தார்—தமிழ்ப்
பண்புகள் வாழ்ந்திட வந்தார்—நமை
கற்பவை கற்றிடச் சொன்னர்—புவி
காக்கும் முறையையும் சொன்னர். (தெய்)

அருளும் அன்பும் ஊட்டி—நமக்கு
ஆகா தவைகளை ஓட்டி—உயர்
பொருளும் இன்பும் காட்டி—அறம்
பொழிந்தார் இரண்டடிப் பாட்டில். (தெய்)

தீமையை நீக்கிடும் மருந்து—தமிழ்த்
"தெய்வப் புலவரி"ன் விருந்து—நலம்
ஆமிதை உண்டே திகழ்ந்து—நமது
அறிவை வளர்ப்போம் மகிழ்ந்து. (தெய்)

—※—




# கம்பர்

கம்பர் என்றொரு கவிஞர்—இராம
காப்பியம் செய்தார் புவியில்.
கொம்புத் தேனை அமிழ்தில்—சேர்த்துக்
குழைத்தார் அந்தத் தமிழில்.

சொல்லெல் லாம்கற் கண்டு—ஒன்பது
சுவையும் அதனுள் உண்டு.
கல்லும் உணர்வைக் கொள்ளும்—வானும்
கடலும் ஒன்றாய்த் துள்ளும்.

துணிவுந் திறனும் பெருகும்—கவியைச்
சொன்னால் துன்பம் கருகும்.
அணியும் அறிவும் பொங்கும்—அதனுள்
அறமும் அருளும் தங்கும்.

பயில்வோர் உணர்வைப் பெருக்கும்—வாழைப்
பழம்போ லினிதாய் இருக்கும்.
குயில்போல் இசையின் வண்ணம்—பாவில்
குவியும் நல்லோர் எண்ணம்.

மொழியிற் பற்றுண் டாக்கும்—தமிழின்
முறையோ டுணர்வைத் தூக்கும்.
விழியில் கற்பனை ஏறும்—செய்யுள்
விளைக்கும் சிந்தனை ஊறும்.

பார்க்கும் பொழுதே இனிக்கும்—பாடிப்
பயின்றால் நெஞ்சைப் பிணிக்கும்.
யார்க்கும் விருப்பைப் பெருக்கும்—இந்த
ஞாலக் கவிகளுள் சிறக்கும்





# ஔவைப் பாட்டி

ஔவைப் பாட்டி வந்தாள்
ஆத்தி சூடித் தந்தாள் —(ஔவை)

அமிழ்தும் தேனும் கூட்டி,
அறிவும் நெறியும் காட்டி,
தமிழைக் காக்கும் ஈட்டி,
தந்தாள் தமிழ்ப் பாட்டி. (ஔவை)

ஔவை யாரின் பாட்டு,
அறியா மைக்கு வேட்டு.
செவ்வை யாகக் கேட்டு,
தின்போம் தமிழ்க் கூட்டு. (ஔவை)

நல்வழி ஒன்றைப் பாடி
நமக்குத் தந்தாள் தேடி.
கல்விக் கேயது கோடி
கருதிப் படிப்போம் கூடி. (ஔவை)

'இன்பம் ஈதல்' என்றாள்,
இறப்பில் லாமல் நின்றாள்.
'அன்பு கடவுள்' என்றாள்,
அறத்தைப் பாடி வென்றாள். (ஔவை)

நெல்லிக் கனியை உண்டு,
நீண்ட ஆயுள் கொண்டு,
வெல்லுந் தமிழைக் கண்டு,
விரும்பிச் செய்தாள் தொண்டு. (ஔவை)

அன்னை தந்தை தெய்வம்,
ஆசா னும்நம் தெய்வம்,
சொன்ன ஔவை தெய்வம்,
தொழுதே நாளும் உய்வோம். (ஔவை)



# சிறப்பு

வீட்டுக்குச் சிறப்பு சுடர்விளக்கு,
வீரர்க்குச் சிறப்பு வெகுளாமை,
பாட்டிற்குச் சிறப்பு பண்ணமைதல்,
படிப்பிற்குச் சிறப்பு மறவாமை.

நண்புக்குச் சிறப்பு நாணமை,
நாவிற்குச் சிறப்பு நலம்பேசல்,
பண்பிற்குச் சிறப்பு பசிநீக்கல்,
பாவுக்குச் சிறப்பு பைந்தமிழே.

அன்பிற்குச் சிறப்பு பொறையுடைமை,
அரசுக்குச் சிறப்பு முறையுடைமை,
இன்பிற்குச் சிறப்பு கரவாமை,
ஏழ்மைக்குச் சிறப்பு இரவாமை.

நாட்டுக்குச் சிறப்பு நல்வளமே,
நகருக்குச் சிறப்பு கலைவளமே,
ஏட்டிற்குச் சிறப்பு இன்னுரையே,
எல்லோர்க்குஞ் சிறப்பு ஒற்றுமையே.




தேயிலை காப்பி குடிக்காதே!
சிறுவரை என்றும் அடிக்காதே!
தீயவை ஒன்றையும் சேர்க்காதே!
திரைப்படம் அடிக்கடி பார்க்காதே!

பண்ணெடு பாடுதல் மறக்காதே!
படங்களின் மேலே கிறுக்காதே!
பெண்ணெடு வம்புரை பேசாதே!
பெற்ருேரை வணங்கக் கூசாதே!

காலத்தை வீணே கழிக்காதே!
கற்றதை மறந்து விழிக்காதே!
மேலவர் மொழியைக் கடக்காதே!
மிதியடி இன்றி நடக்காதே!

பாதியில் வேலையை நிறுத்தாதே!
படுக்கையில் அழுக்குடன் 'இருக்காதே!
சூதுசெய் வாரொடு சேராதே!
சொல்லிய சொல்லை மாருதே!

...oOo...

நக்கீரர் கழகம்,
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

# மூன்றும் பகுதி

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (திருவள்ளுவர்)




குழலினும் யாழினும் குழைத்த செவ்வியாய்
மழலையஞ் சிறுவர்சொல் மருந்தில் இன்பமாம்
(தீர்த்தகிரி புராணம்)

# எந்தாய்

தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார் —பாரதியார்.

அறமே உருவாய் அமைந்தாயே!
அறிவும் நெறியும் தருவாயே!
புறமாய் அகமாய் நிகழ்வாயே!
புத்தமிழ் தாகித் திகழ்வாயே!
நிறமா மலர்போல் ஒளிவீசும்,
நேசத் தமிழ்உன் புகழ்பேசும்,
திறமே அருள்வாய் பெருநிதியே!
சிந்தைக் கொளிசெய் முழுமதியே!

சேரர் சோழர் பாண்டியர்நின்
சேவடி துணைஎனப் பூண்டதனால்,
வீரம் கமழ ஆண்டார்கள்;
வெற்றிப் புகழால் நீண்டார்கள்.
ஈரம் வளர்த்தாய் இயல்கண்டாய்;
எழிலோ டிசையின் சுவைகண்டாய்;
சீரும் செழிப்பும் தந்தாயே!
செந்தே னமிழ்தே! எந்தாயே!




மழையே மழையே வருவாயே !
மண்மேல் வளத்தைத் தருவாயே !
இழைபோல் வழங்கும் அருளேவா !
இறைவன் உருவின் பொருளேவா ! (மழை)

கொடியும் மரமும் கொழுந்துவிட,
குளமும் யாறும் வழிந்துயர,
குடியும் கோனும் வாழ்வு பெறக்
குமுறி எழுந்தே வீழ்வாயே ! (மழை)

கொட்டும் மழையே வருவாயே !
குடைக்குள் பெய்யா திருப்பாயே !
சொட்டுச் சொட்டாய் அழுவாதே !
தொங்கிக் கூரையில் விழுவாதே ! (மழை)

பாரியைப் போலே வழங்கிடுவாய்.
பாவலர் நாவில் முழங்கிடுவாய்.
ஏரி குளங்களை நிரப்பிடுவாய்.
இன்பம் உலகில் பரப்பிடுவாய். (மழை)

அமிழ்தம் என்றே வள்ளுவனார்,
அவர் திருக் குறளில் சொல்லுகிறார்.
தமிழைப் போன்றே குளிர்ந்திடுவாய் ;
தரையில் இறங்கி வளர்ந்திடுவாய் ! (மழை)

செடியும் கொடியும் உன்னாலே
செழிப்பாய் வளரும் தன்னாலே.
இடியும் மின்னும் தம்பிகளோ ?
இறங்கும் வானக் கம்பிகளே ! (மழை)

ஆற்றில் வெள்ளம் நிறைப்பாயே !
அணையில் தேங்கி இருப்பாயே !
காற்றில் லாமல் பெய்வாயே !
கழனிகள் விளையச் செய்வாயே ! (மழை)

விண்ணில் எங்கே உறைகின்றாய் ?
விரைவாய்ப் பெய்து மறைகின்றாய்.
உண்ணும் உணவும் நீயாவாய் ;
உயிரை வளர்க்கும் தாயாவாய். (மழை)






*விந்தை மிகும் வேனிற் காலம்—அதன்*
*வெப்பத்தி னால்விளை யும்பல கோலம்-(விந்தை)*

பள்ளிக்கு விடுமுறை யாகும்—வெய்யில்
பட்டப் பகலில் தெருவெல்லாம் வேகும்
உள்ளுக்குள் வெம்மையைச் சேர்க்கும்—வெளி
உடம்புக்கு மேலெங்கும் நீராவி வேர்க்கும்
பள்ளத்தில் நீர்வற்றிப் போகும்—அங்கே
பாசித் தழையொடு மீன்களும் சாகும்
கொள்ளியைப் போலனல் தாவும்—கடுங்
கோடையை எண்ணிட வாடும்நம் நாவும்.
—(விந்தை)

செடிகொடி நீரின்றி வாடும்—நல்ல
செருப்பின்றி நடந்தாலோ கொப்புளம் போடும்
உடையணிந்தா லுடல் எரியும் இலை
உதிர்ந்து மரம்மட்டை யாவுமே கரியும்
குடைக்குள்ளே சென்றாலும் பொங்கும்—நடுக்
கோடையில் வேலைசெய் தாலுடல் மங்கும்
பொடிசுடும் பூக்களும் வாடும் இவை
போகச் சிறிதங்கே தென்றல் வந்தோடும்.
—(விந்தை)




மதியே மதியே வாராயோ?
    மாலை வந்ததும் பாராயோ?
துதிசெய் வோம்இனி வருவாயே!
    தோழர்க் கின்பந் தருவாயே! (மதி)

இருளைப் போக்க வருவாயே!
    எங்கும் ஒளியைத் தருவாயே!
மறுவைப் போக்கி நிற்பாயேல்,
    மல்லிகைப் பந்தை ஒப்பாயே! (மதி)

காலில் லாமல் உழந்தாயோ?
    களைப்பால் உள்ளம் அழிந்தாயோ?
பாலில் வழுக்கி விழுந்தாயோ?
    பனியில் மூழ்கி எழுந்தாயோ? (மதி)

விண்ணின் முகம்போல் நோக்கினையே;
    விளையும் அமிழ்தைத் தேக்கினையோ?
மண்ணின் இருளை நீக்கினையே;
    வானத் திருளைப் போக்கினையோ? (மதி)

பொங்கும் பனியால் குழைந்திடுவாய்;
புலவோர் கவியுள் நுழைந்திடுவாய்;
எங்கும் சிறுவர் அழைத்திடுவார்;
இறங்கி வந்தால் பிழைத்திடுவாய். (மதி)

வந்தால் துன்பப் படமாட்டாய்;
வரா திருந்தால் விடமாட்டார்;
விந்தை மிகுந்த யந்திரத்தால்
விண்வெளி வீரர்கள் வந்திடுவார். (மதி)

ஏவிக் கணைகளை விட்டிடுவார்;
எப்படி யும்உனைத் தொட்டிடுவார்;
தாவிப் பொறியால் கிட்டிடுவார்;
தங்கும் வீடுகள் கட்டிடுவார். (மதி)

நிலவே மதியே வாராயோ?
நிலத்தில் இறங்கிச் சேராயோ?
குலமோ பொருளோ பாராயே?
குறைகள் எல்லாம் தீராயோ? (மதி)




கும்மியடி தோழி கும்மியடி! தமிழ்க்
கோலம் விளங்கிடக் கும்மியடி!
செம்மை வளர்கரந் தைத்தமிழ்ச் சங்கத்தின்
தெய்வத் தமிழென்று கும்மியடி! (கும்மி)

வானம் அளாவிய யாவும் விளங்கிட
வாழ்வியல் நூல், இசை, நாடகமும்
தேனும் அமிழ்தமும் தென்றலும் பின்னிடச்
செய்தளித் தாரென்று கும்மியடி! (கும்மி)

மன்னர்கள் போற்றி வளர்க்கமுச் சங்கத்தில்
வாழ்ந்து சிறக்கும் பழந்தமிழ்த்தாய்
தென்னகம் முற்றும்செங் கோல்கொள நிற்பவள்
சீர்த்தியைப் பாடி யடிங்கடி! (கும்மி)

விந்தை சிறந்துநம் சிந்தையில் நல்லறம்
வீறுறச் செய்பவள் செந்தமிழ்த்தாய்;
முந்துபல் லாண்டுகள் மூத்துக்கலை நலம்
மூண்டொளிர் வன்மையைப் பாடுங்கடி! (கும்மி)

நாலு பொருளையும் காட்டிநின்றாள் இந்த
நானிலம் உய்யும் வழிமொழிந்தாள்
காலத்தி னல்அழி யாததமிழ்க் கன்னி
கல்வியின் தெய்வமென் றாடுங்கடி ! (கும்மி)

சாத்தன் திருத்தக்க தேவன் இளங்கோ, நம்,
தண்டமிழ் வள்ளுவன் ஒளவைஎனும்
மூத்த கவிஞரை ஈன்று சிறந்தவள்
முத்தமிழ்த் தாயென்று கும்மியடி ! (கும்மி)

கம்பர் அருள்மொழித் தேவர்மு தல்பல
காவியஞ் செய்த கவிஞர்களை
அம்புவி ஓங்கிடப் பெற்றளித் தாள்அந்த
அன்னையைப் பாடி அடியுங்கடி ! (கும்மி)

வந்தவர் நொந்தவர் மைந்தர்கள் யாவரும்
வாழ இலக்கியம் தந்தொளிர்வாள்
பைந்தமிழ்த் தாய்கழல் போற்றிப் பணிந்திசை
பாடி நின்றாடியே கும்மியடி! (கும்மி)



நக்கீரர் கழகம்
திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி






*மலரே மங்களப் பொருளாகும்*
*மணமே அவற்றின் அருளாகும் —(மலரே)*

காலையில் மலரும் தாமரையே;
கண்ணுக் கினியது தாமரையே!
மாலையில் மலரும் கொடிமுல்லை.
மணத்தால் நிறையும் பூக்கொல்லை.

தேனை நாடி வரும்வண்டு,
சிரிக்கும் பூக்கள் அதுகண்டு.
வானில் மீன்கள் இமைத்திருக்கும்
வனத்தில் மலர்கள் அமைத்திருக்கும்.

பூசை மலரால் புரிவார்கள்
பூவின் பயனைத் தெரிவார்கள்.
ஆசை கொண்டே புகழ்வார்கள்
அருகில் சென்றே நுகர்வார்கள்.

மலரால் மாலை புனைவார்கள்
மங்கையர் கூந்தலில் அணிவார்கள்.
மலரால் எங்கும் மணம்நிறையும்
மக்கள் துன்பம் போய்மறையும்.

...oOo...





நக்கீரர் கழகம்
எண்.........

# ஆளப்பிறந்தீர்!

*பாலர்க ளே! இன்று பள்ளிச் சிறார்நீர்*
*பாரதத் தைநாளை ஆளப்பி றந்தீர்! - (பால)*

பண்ணைப் பெருக்கிநல் லன்பை வளர்ப்பீர்!
பாரத ஒற்றுமை கூட்டித் தளிர்ப்பீர்!
நண்புற வோங்கஎந் நாளும் உழைப்பீர்!
நச்சுப் பகையைப்போ ராடி ஒழிப்பீர்! — (பால)

காலமெல் லாம்நல்ல கல்வி பயில்வீர்!
கற்ற படிநிற்க முற்றும் முயல்வீர்!
நாலு திசையும்போய் நற்கலை ஆய்ந்தே,
நாளும் கொணர்ந்தளிப் பீர்உளந் தோய்ந்தே!
—(பால)

ஏற்பவர் ஈபவர் இனிஇல்லை என்பீர்!
எப்பொரு ளாயினு மேபகுத் துண்பீர்!
நாற்பத்தெண் கோடிநாம் ஒன்றெனச் சொல்வீர்!
நல்லறி வாற்புவித் தீங்கினை வெல்வீர்!
—(பால)

பொன்மலை போல்வன்மை சேருடல் கொண்டும்,
புதியவிஞ் ஞானப் பொருள்பல கண்டும்,
நன்மைத ரும்பணி செய்திட வேண்டும்,
நானிலத் தேபுகழ் எய்திட வேண்டும்! (பால)




எண்ணில் லாத விண்மீன்கள்
எத்தனை அழகு! அடடடடா!
கண்ணைச் சிமிட்டிப் பார்ப்பதுபோல்
கருவா னத்தில் பூப்பதைப்பார்;

முத்துப் பந்தல் இட்டதுபோல்
முழுவா னத்தில் விண்மீன்கள்
கொத்துக் கொத்தாய் ஒளிவீசிக்
கொண்டே மின்னும் அழகைப்பார்!

சோளப் பொரியை வானத்தில்
தூவிப் பரப்பி விட்டதுபோல்,
கோலப் புள்ளி இட்டதுபோல்,
குறுகுறு வென்னும் அழகைப்பார்!

முல்லைக் காடு பூத்ததுபோல்
முகமில் லாத கருவானம்
பல்லைக் காட்டிச் சிரிப்பதுபோல்
பளபள வென்னும் அழகைப்பார்

கடலில் மிதக்கும் ஓடம்போல்
காணும் பிறை, அதன் பக்கமெலாம்
படகைச் சுற்றி வரும்மீன்போல்,
படரும் விண்மீன் அழகைப்பார் !

நீலத் திரையின் முன்னாலே
நின்று விழிக்கும் மீனெல்லாம்
காலைப் பொழுது வந்தவுடன்
கண்ணை மூடித் தூங்கிடுமே.

## மின்விளக்கு

எண்ணையின்றித் திரியுமின்றி எரியுதுமின் விளக்கு
இளைப்புமின்றிக் களைப்புமின்றி எரியுதுமின் விளக்கு
கண்ணைக்கூசும் ஒளிபரப்பிக் கதிரவன்போ லிருக்கும்
காற்றுமழைக்கு அஞ்சிடாமல் காந்தும் ஒளியைப்
[பெருக்கும்.

வண்ண வண்ண மின்விளக்கு வரிசையாக எரியும்
வானம்மின்னி இடியிடித்தால் வற்றிஒளி குறையும்
எண்ணிஎண்ணி ஓரறிஞர் இயற்றினர் மின்விளக்கு
இதனைப்போல நீயுமொன்று கண்டுநன்மை துலக்கு!




தாமரைக் குளத்தருகே வாராய்!—பச்சைத்
தட்டிலே உருளும்முத்தைப் பாராய்!
ஆமைத்தலை போலஎழும் நேராய்—வெள்ளை
அல்லிமொட்டு நீயதனைப் பாராய்!

தும்பிவண்டு தாமரையில் பாடும்—நீரில்
துள்ளிவரும் மீன்கள்விளை யாடும்
சம்பங்கோழி மூழ்கிவிரைந் தோடும்—கரை
தங்கியிரு நாரைஇரை தேடும்.

மெல்லவரும் காற்றுசல சலக்கும்—மலர்
மீதிருக்கும் வண்டுகல கலக்கும்,
வல்லசிரல் மேலெழுந்து நிலைக்கும்—அலை
வந்துசிறு கோரைகளை அலைக்கும்.

தத்தித்தத்தி நீர்த்தவளை பாயும்—சிறு
சங்குகள் படித்துறையில் தோயும்
பத்திபத்தி யாய்க்கயல்கள் மேயும்—இரை
பார்த்திருக்கும் நாரையதில் சாயும்.

மெல்லிதழைத் தாமரைவி ரிக்கும்—அதன்
மேல்வழியும் தேன்குளத்தைப் பெருக்கும்
அல்லிமலர் தன்னிதழைச் சுருக்கும்—இசை
ஆளத்தியை வண்டுகள் பெருக்கும்.



# காந்தியார் வாய்மொழி



மோகன தாசர் காந்தி—சொன்ன
மொழிகளை மனத்தில் ஏந்தி—உலகம்
ஏகிடுமேல் துயர் நீந்தி—மக்கள்
இன்புறு வார்வரும் சாந்தி.

எதையும் அன்புடன் நோக்கு!—யார்க்கும்
இன்னா செய்தலை நீக்கு!—உள்ளம்
சிதையும் பொய்யுரை போக்கும்!—இவையே
தேசத் தந்தையின் வாக்கு.

உத்தமர் காந்தி அடிகள்—வாய்ச்சொல்
உலகம் முன்னேறும் படிகள்—எல்லாம்
சத்திய மொழிகளின் முடிகள்—அவற்றைச்
சார்ந்தால் அகலும் மிடிகள்.

காந்தியின் சொற்படி வாழ்வோம்—உண்மைக்
கடமைகள் செய்தே வாழ்வோம்—எல்லா
மாந்தரும் ஒற்றுமை சூழ்வோம்—இதனை
மறந்தால் யாவரும் தாழ்வோம்.



# அமரர் நேரு

மலரில் விளங்கும் நேரு! - என்றும்
மனித ருக்குள் மேரு!
உலகம் புகழும் மனிதர்—மக்கள்
உளத்தில் திகழும் புனிதர். —(மலரில்)

ஆசி யாவின் சோதி—இந்த
அகில உலக நீதி!
வாச மலரில் பாசம்—நாட்டு
மக்க ளின்மேல் நேசம். (மலரில்)

தவத்தி னாலே பிறந்தார்—நாடு
தழைக்கத் தொண்டு புரிந்தார்.
குவல யத்தின் தலைவர்—சின்ன
குழந்தை மகிழும் கலைஞர். —(மலரில்)

செல்வக் குடியில் பிறந்தார்—தேசம்
திருந்த யாவும் துறந்தார்.
கல்வி யில்தலை சிறந்தார்—நல்ல
கலையில் உணர்வு நிறைந்தார். —(மலரில்)

புவியில் அமைதி சேரத்—தொண்டு
புரிந்த மேதை நேரு.
நலமும் வளமும் தந்தார் இந்த
நாடு வாழ வந்தார். —(மலரில்)

சவகர் கண்ட காட்சி—சம
தரும மக்க ளாட்சி.
நவயு கத்தின் தலைவர்—நேரு
நாவ லர்க்குள் புலவர். —(மலரில்)

பஞ்ச சீலம் வகுத்தார்—உலகில்
பார தப்புகழ் மிகுத்தார்;
நெஞ்சில் உறுதி பூண்டார்—பண்பு
நிறைந்து நாட்டை ஆண்டார்.—(மலரில்)

வீரம் நிறைந்த சிங்கம்—நாட்டின்
விலை யில்லாத தங்கம்.
ஈரம் மிகுந்த எண்ணம்—கொண்ட
இந்தி யாவின் மன்னன். —(மலரில்)






*பாரதியார் இங்கு வந்தாரே—புதுப்*
*பாடல்கள் தமிழில் தந்தாரே.*

இடியைப் போலே முழங்கிடுவார்—தமிழ்
இனிமை முழுதும் வழங்கிடுவார்—ஓர்
அடியில் உணர்வைப் பெருக்கிடுவார்—நம்
அறிவை அதிலே முறுக்கிடுவார்.

பக்தி பிறந்திடும் பாவினிலே—பசும்
பாலும் கசந்திடும் நாவினிலே—பெரும்
சக்தி பிறந்திடும் மூச்சினிலே—முத்
தமிழும் வளர்ந்திடும் பேச்சினிலே

எண்ணிப் பார்த்தால் சுவைஏறும்—தமிழ்
எட்டுத் திசையும் மணம்நாறும்—புகழ்க்
கண்ணன் பாட்டில் தமிழ்ஊறும்—அதைக்
கற்பவர் வாயில் அமிழ்தூறும்.

தீங்கினைச் செய்தால் பழித்திடுவார் வளர்
தேசப் பற்றைக் குழைத்திடுவார்—பழி
தூங்கும் முகத்தை இழித்திடுவார்—நிறை
தொண்டுகள் செய்ய அழைத்திடுவார்

ஒற்றுமை வாழ்வை வேண்டிடுவார்—பெரும்
உறுதியை நெஞ்சில் தூண்டிடுவார்—புகழ்
வெற்றிகொள் முரசு கொட்டிடுவார் பல
விடுதலைப் பாட்டுகள் கட்டிடுவார்.

ஆணும் பெண்ணும் நிகர்என்றார்—நம்
அடிமைத் தளையைத் தகர்என்றார்—மதி
பேணும் ஞான ரதம்செய்தார்—தமிழ்ப்
பெருமையை உலகெங் கும்பெய்தார்

சமயம் யாவும் ஒன்றென்பார்—இனிச்
சாதிகள் எவையும் இல்லென்பார்—வட
இமயம் எங்கள் மலையென்பார்—வரும்
இழிவாம் பகையைத் தொலைஎன்பார்.



# வீர சிதம்பரனார்

சிதம்பர னார்எனச் சொன்னாலே—வரும்
தேசப் பற்றுத் தன்னாலே!
சுதந்திரத் தீயில் நெய்விட்டார்—முதல்
சுதேசக் கப்பலைக் கைதொட்டார்.

செல்வமும் வாழ்வும், சுதந்திரமே—பெறத்
தியாகஞ் செய்த சிதம்பரனார்,
கல்வியிற் சிறந்த சிதம்பரனார்—புகழ்க்
கப்பல் ஓட்டிய தமிழ்மகனார்.

அரங்கந் தோறும் முறையிட்டார்—மக்கள்
அடிமையை எண்ணிக் குறைபட்டார்
பரங்கியர் அவரைச் சிறையிட்டார்—தன்னை
பாரத நாட்டிற் கிரையிட்டார்.

கருங்கல் உடைத்தார் செக்கிழுத்தார்—சிறைக்
களியை உண்டு நமக்குழைத்தார்.
உறங்கிய நமதுமக் கள்விழித்தார்—புகழ்
உரிமையைப் பெறஉள் ளந்தழைத்தார்.

பாரதி புகழ்ந்த சிதம்பரனார்—உயர்
பண்புகள் நிறைந்த சிதம்பரனார்
வீரருள் வீரர் சிதம்பரனார் நாட்டு
விடுதலை வீரர் சிதம்பரனார்.




வானளாவும் சோலைக்குள்ளே வந்துசேருங்கள்—அங்கே
வகைவகையாய் வளர்ந்துநிற்கும் மரங்கள்பாருங்கள்!
தேனிருக்கும் வண்ணமலர் பூத்துக்குலுங்கும்—விளைந்த
தீங்கனிமா வாழைபலா எங்கும்விளங்கும்

பாக்குமரம் யாவும்பந்தல் கால்களாகுமே—ஓங்கிப்
படர்ந்திருக்கும் ஆலமரம் கூரையாகுமே
பூக்குமலர்க் கொடிகள்தொங்கும் தோரணமாமே—மாலைப்
பொழுதிலந்தச் சோலையிலே நாடகமாகும்

தணிந்தமரக் கிளையில்காக்கை இருந்துகரையுமே—வானில்
தவழும்மேகம் மேடைமீது திரைகளாகுமே.
கனிந்திடும்செம் மாதுளைமின் விளக்குப்போடுமே-மணிக்
கம்பளத்தை உதிர்ந்தமலர்கள் விரித்துவைக்குமே.

பச்சைக்கிளி குரலெடுத்துப் பாட்டுப்பாடுமே—சுற்றிப்
பறக்கும்வண்டு சிறகில்வீணை மீட்டிநிற்குமே.
இச்சிமரக் கிளையில்இலைகள் தாளம்போடுமே—வீசும்
இனியதென்றல் வந்துபுல்லாங் குழலைஊதுமே.

வண்ணமயில் தோகைவிரித் தரங்கில்ஆடுமே—கண்டு
மகிழும்புறா மெல்லநடந்து வந்துகூடுமே.
கண்மலரால் செடிகள் பார்த்துக் கொண்டிருக்குமே-நடனம்
கண்டுமுல்லை அரும்புநகை புரிந்துபார்க்குமே.



# பாரி வள்ளல்

பாரி பறம்பின் மன்னன்—பொருளை
வாரி வழங்கும் வள்ளல்.
ஊரில் உள்ள புலவர்—அவனை
மாரி என்றே புகழ்வார்.

வீரம் மிக்க மன்னன்—பெரும்
போருக் கஞ்சாத் திண்ணன்.
பேரும் புகழும் பெற்றோன்—அவனை
யாரும் வென்றோர் இல்லை.

வேட்டை புரிய ஒருநாள்—தேரை
ஓட்டிக் கொண்டு சென்றான்;
காட்டில் விலங்கை அம்பால்—மிகவும்
வாட்டி ஓடச் செய்தான்.

திரும்பி வந்தே தேரில்—செல்ல
விரும்பி ஏறும் போது
அரும்பு முல்லை சுற்றித்—தேரில்
நிரம்பிப் படரக் கண்டான்.

படர்ந்த கொடியைப் பிரிக்க—உள்ளம்
இடந்த ராமல் நின்றான்
அடர்ந்த காட்டில் தேரை—விட்டு
நடந்து நகரை அடைந்தான்.

இல்லை என்பதை அறியான் மிக்க
நல்ல உள்ளம் உடையான்
முல்லைக் குத்தேர் கொடுத்தான்—கொடை
எல்லைக் குப்பேர் எடுத்தான்.

## மலை

பாலைப் போல அருவி ஓடிப் பளபளக்கும்மலையே !
பனிநிறைந்து வெள்ளி போல இருப்பதேனுன் தலையே ?
மாலை நேரக்க திரவனை மகிழ்ந்த ழைக்கும் மலையே
மரமும் செடியும் கொடியு முன்மேல் வளர்வ தும்ஓர்கலையே





# தமிழவேள்
## உமாமகேசுவரம்பிள்ளை

தண்டமிழ் வாழக் கரந்தையிலே—தமிழ்ச்
சங்கத்தைப் போற்றிப் புரந்த தமிழ்த்
தொண்டர் உமாம கேசப் பெரியார்—அவர்
தூய புகழினைப் பாடுவோமே.

செந்தமிழ் நாட்டிற் பிறந்தாரே—இந்தத்
தென்னகம் போற்றச் சிறந்தாரே
பைந்தமிழ்ச் சீர்த்தி பகர்ந்தாரே—அவர்
பண்பினைப் பாடியிங் காடிடுவோம்.

நாவலர்க் கோர் துணை யானாரே—இந்த
நாடு தழைக்க உழைத்தாரே
பாவலர் நட்பை வளர்த்தாரே—தமிழ்ப்
பண்பினை எங்கும் விளைத்தாரே.

நற்றமிழ் நூல்கள் நிறைந்திடவே—தமிழ்
நாட்டவர் உள்ளந்திறந்திடவே
கற்றவர் ஒற்றுமை கண்டிடவே—தமிழ்க்
காவல ராய்ப்பணி கொண்டனரே

வண்ணத் தமிழின்றித் தென்னவர்க்கு—நல்ல
வாழ்வில்லை என்று துணிந்தாரே
எண்ணம் உரைசெயல் யாவையுமே—தமிழ்
ஏற்றம் பெறுவதற் கீந்தாரே.

வாட்டங் களைந்தறி வூட்டுதற்கே—ஏழை
மாணவர்க் கோர்இல்லம் வைத்தாரே.
நோட்டம் தரும்கல்வி ஓங்கிடவே—பெரும்
நூலகம்வைத்து வளர்த்தாரே.

வேற்றவர் தீங்கினுக் கஞ்சாமல் தமிழ்
வீறுபெற் ருேங்கச் செயல்புரிந்தார்
மாற்றவ ரும்புகழ்ந் தேற்றிடவே—புவி
மக்கட் குழைத்து மகிழ்ந்தாரே

முத்தமிழ்த் தாயின் முதல்மகனாய்த்—தமிழ்
மூன்றும் வளர்க்கும் புரவலராய்
வித்தகக் கல்வியில் வீறுகொண்டார்—அவர்
வேள்வியைப் பாடி யடித்திடுவோம்.

கூறுந் தமிழவேள் சீர்த்தியெலாம்—இங்கே
கும்மியடித் தாடிப் பாடிடு வோம்
சீரும் சிறப்புமிச் சங்கத்திலே—பொங்கச்
செய் தவர் தொண்டினைப் பாடிடுவோம்.



நான்காம் பகுதி

# மக்கட் செல்வம்

(பெற்றோர்க்கு மட்டும்)

*படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்*
*உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்பட*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டுந் தொட்டுங் கௌவியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில்மெய்பட விதிர்க்கும்*
*மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*
*பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே.*

(பாண்டியன் அறிவுடைநம்பி-புறம், 188)







# பிள்ளை

*துள்ளித் தவழ்ந்திடும் பிள்ளை—மனத்*
*துன்பத்தைப் போக்கிடுங் கிள்ளை—(துள்ளி)*

தொட்டால் சுவையேறும் கற்கண்டுக் கட்டி
சுடரின்றி ஒளிவீசும் மாணிக்கச் சுட்டி
கொட்டும்நீர் இல்லாமல் குளிர்செய்யும் சோணை
கொளைநரம் பில்லாமல் மகிழ்செய்யும் வீணை.

சிறகு முளைக்காமல் திரிகின்ற சிட்டு
சிந்தை இனிக்கத் திரண்டதேன் சொட்டு
துறவிக்கும் வேட்கையைத் தருமின்பக் கட்டு
துன்பம் விரிக்காத தூமலர் மொட்டு

தேடிக் கடிமலர் சேராத வண்டு
செங்கரும் பில்லாமல் செய்தகற்கண்டு
வாடிக் குவியாத வண்ணப்பூஞ் சோலை
மழலை மொழிச்சாறு வற்றாத ஆலை

தாறின்றித் தீங்கனி தந்திடும் வாழை
தட்டாத இன்பங்கள் தாங்கிடும் பேழை
ஊறின்றிச் செய்த இலக்கிய ஏடு
உண்மை அழகொளிர் மாமலர்க் காடு

வளிகொண்டு வீசாமல் குளிர்செய்யும் தென்றல்
மலர்கொண்டு செய்யாமல் அலர்கின்ற மன்றல்
உளிகொண்டு செய்யாத உயிருள்ள சிற்பம்
உலகப்பொ ருள்யாவும் இதைநோக்க அற்பம்

வாயாற்சு வைக்கொண்ணு வண்ணக்க ரும்பு
வாடாத மணம்வீசி வளர்முல்லை அரும்பு
வேயிற்பி றக்காமல் விளைந்தநல் முத்து
வேளைக்கு வேளைவி ருப்பேறும் சொத்து






அமிழ்தில் அன்பைச் சேர்த்து
அழகுத் தேனை வார்த்து
தமிழின் நீர்மை கோத்துச்—செய்த
தம்பிப் பாப்பா வா வா வா !
தங்கக் குடமே வா வா வா !

மலரில் அருளை கூட்டி
மதியின் இருளை ஓட்டி
புலருங் கதிரை நாட்டிச்—செய்த
பொன்னே பாப்பா வா வா வா !
பொங்கும் மகிழ்வே வா வா வா !

கனியின் சாற்றைக் கொடுத்து
கரும்பின் பாகை அடுத்து
பனியின் நீரை மடுத்துச்—செய்த
பவழப் பாப்பா வா வா வா !
பன்னீர்ச் சொம்பே வா வா வா !

மணியைப் பொன்னில் வைத்து
மலரின் பொலிவைத் தைத்து
திணியும் சிலையா மெய்த்துச்—செய்த
தெய்வப் பாப்பா வா வா வா
**செந்தமிழ் வடிவே! வா வா வா !**



# தாயுள்ளம்

சின்னக் குழந்தை பொன்வண்ணக் குழந்தையை
எண்ணி மகிழ்ந் திடுந்தாய்—பெற்ற
சின்னக் குழந்தையின் தாய் —(பெற்ற)

வண்ண மதியெனும் சின்ன முகத்தினில்
எண்ணமெல் லாம்நிலை கொள்ளும்—அதை
ஏந்திடக் கைகளும் துள்ளும் —(பெற்ற)

நீலம் மலர்ந்தொளி வீசும் விழிகளின்
கோலத்தி லேஅகம் மேயும்—மலர்க்
கொத்துச் சிரிப்பினில் தோயும் (பெற்ற)

நுங்குச் சுளைபோன்ற வாயின் அழகினில்
பொங்கி மகிழ்ந்துகண் நோக்கும்—மலர்ப்
பூங்கொத்துப் போலதைத் தூக்கும் —(பெற்ற)

பாளைச் சிரிப்பினில் சிக்கிப் பெரும்பசி
வேளை மறந்திசை மாந்தும்—அந்த
வெள்ளத்தி லேமூழ்கி நீந்தும் —(பெற்ற)

அல்லி இதழொத்த நாக்கின் அழகினைச்
சொல்லி மகிழ்ந்துளம் பூக்கும்—அந்தச்
சூழலில் துன்பத்தைப் போக்கும் —(பெற்ற)

வள்ளைப்பூப் போலிரு காதின் வனப்பினில்
உள்ளம் பறிகொடுத் தாடும்—தலை
உச்சி நுகர்ந்திடத் தேடும் (பெற்ற)

இமைகளுக் குள்ளே எழுப்பிடும் அன்பினை
அமுத விழிகளில் தேடும்—மனம்
ஆனந்தப் பல்லவி பாடும் —(பெற்ற)

பாலிலே தோய்த்த பலாச்சுளை போலிரு
காலினைக் கண்டுளம் நெகிழும்—பிஞ்சுக்
கைகளைப் பார்த்துடன் மகிழும். —(பெற்ற)

பட்டினைப் போன்ற பசுந்தளிர் மேனியைத்
தொட்டு மகிழ்ந்துடல் குளிரும்—இரு
தோள்களைக் கண்டுளம் மிளிரும் —(பெற்ற)

பெற்ற பெருஞ்செல்வப் பேற்றினிலே மற்றைச்
சுற்றமெல் லாம்மறந் திருக்கும்—உளம்
தூய"நற் றாய்"எனச் சிறக்கும் —(பெற்ற)






வாழும் நிலவே முகமாக
    வளரும் விண்மீன் நகையாகச்
சூழும் முகில்சிறு குழலாகச்
    சோலைகள் யாவும் உடலாகத்

தாழும் நதிகள் காலாகத்
    தவழ்கடல் அலைகள் கையாக
ஊழிபல் லூழிஉருண் டுவரும்
  உலகே குழந்தை வடிவம்மா !

—:O:—

# சோலையும், குழந்தை.

செவ்வந் திப்பூத் திருமுகமாச்
    சிரிக்கும் முல்லை பல்லாகக்
கொவ்வைக் கனியே இதழாகக்
    குலவும் வண்டே விழியாகச்

செவ்விக் க்ரந்தள் சிறுகையாத்
    தேமாந் தளிரே உடம்பாகத்
தவ்வும் கிள்ளை மொழிபேசித்
      தவழும் குழந்தை சோலையெலாம்



# தேச வாழ்த்து



வாழ்க
பாரதம்!

நீர்செறிந்த பலமொழிவாய்
நிறைகலைசால் முகமும்
நெஞ்சுரமும் ஐந்தறமும்
நிலைத்துலகைத் தாங்கி

ஏர்செறிந்த பொதியில்எழில்
வேங்கடமாய் ஓங்கி
இமயமெனத் தலைநிமிரும்
எங்கள் புகழ்அன்னை

வார்புகழ்சேர் காவிரி
கோதாவிரி வான்கங்கை
வானமுதம் மக்களுய்ய
வார்க்கும் அருள்அன்னை

நேர்மைமிகு திராவிடம்
மராட்டியம் வங்காளம்
நிலைபெருகும் உத்தரம்
பஞ்சாபு முதல்தாங்கிச்

சீர்நிறையும் பாரதத்தாய்
வெற்றிகொண்டு வாழி!
திசைமணக்க நெறிபெருக்கும்
திருவுடையாள் வாழி!



திரு.வி.க.

# உள்ளொளி

அரசி புத்தக நிலையம்